Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 27 ஆம் நாள் ஷஃபான் 4 (11-1-62) வியாழக்கிழமை இதழ் 283

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# ‘ராணுவ திடீர் சோதனை நடத்த வேண்டாம்!’

## தொழிலாளர் மீது பழிவாங்குவதாகப் புகார்

### பார்லிமெண்டில் சரமாரிகேள்விகள்

கொழும்பு, புதன்

‘ஐக்கிய துறைமுகத் தொழிலாளர் யூனியனின் காரியாலயத்தை இன்று மாலை ராணுவத்தினரும் பொலிசாரும் திடீர் பரிசோதனை செய்ததாகத் தெரிகிறது. இப்படியான நடவடிக்கைகள் தொழிலாளர்களைத் தூண்டி விடுவதாக இருக்கிறது’ என வெள்ளவத்தை கல்கிசை எம். பி. டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று பார்லிமெண்டில் பகல் ஒத்திவைப்பு பிரேரணை நேரத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வித நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபடுவது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும். இவ்வித நடவடிக்கைகள் எடுப்பதை உடனடியாக அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இலங்கை வானொலியின் தொழில் நுட்பக் குழுவினரில் உள்ள இருவரது மனைவிமார்கள் தமது கணவன்மார்களைச் சந்திக்க முடியாதவாறு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் ஏன் தடைசெய்ய வேண்டும்? சனிக்கிழமை காலை நேரத்தில் மாத்திரம் இவர்கள் தமது கணவன்மார்களைச் சந்திக்க அனுமதியளிக்கப்படுகிறது. இது மிகவும் மோசமான நடவடிக்கை என டாக்டர் கொல்வின் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

5-ந் திகதி வேலை நிறுத்தம் செய்த இலங்கை தந்திக் காரியாலயத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு முற்பணம் கொடுபட மாட்டாது எனக் கூறும் சுற்றுநிருபத்தை ஆட்சேபித்து நேற்று முழுத்தொழிலாளரும் வேலைநிறுத்தம் செய்தார்கள். மந்திரி கலுகல்லே: அவர்கள் அவ்விதம் வேலை நிறுத்தம் செய்யவில்லை.

டாக்டர் கொல்வின்: தமது இலாகாவின் கீழ் என்ன நடைபெறுகின்றதென்பதைப் பற்றி குறிப்பிட்ட மந்திரிக்கே தெரியாது. இரண்டு மணிநேர வேலைநிறுத்தம் அங்கு நடைபெற்றிருக்கிறது.

## யு தாண்ட் ரொடிஷியா செல்லமாட்டார்

நியூயோர்க், ஜன. 10

ரொடிஷியாவுக்கு நேரில் விஜயம் செய்யும்படி பிரிட்டன் விடுத்த அழைப்பை ஐ. நா. தற்காலிக தலைமைக் காரியதரிசி யு தாண்ட் நிராகரித்ததை காங்கோவுக்கான ஐ. நா. ஆலோசனைக் கமிட்டி ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

வடக்கு ரொடிஷியாவிலிருந்து கடாங்காவுக்கு அந்நிய கூலிப்படைகளும் சட்டவிரோதமாக ஆயுதங்களும் அனுப்பப்படுவதாக வந்த புகார்களுக்கு இனி இடமில்லாமல் செய்யும் வகையில் கடாங்கா-ரொடிஷியா போக்குவரத்துச் சாலைகளில் ஐ. நா. பார்வையாளர்களை நிறுத்த வேண்டுமென்று யு தாண்ட் யோசனை கூறியிருந்தார். இந்த யோசனையை ரொடிஷிய சம்மேளனப் பிரதமர் சேர் ரோய் வலன்ஸ்கி நிராகரித்துவிட்டு யு தாண்டை ரொடிஷியாவுக்கு அழைத்திருந்தார். பிரிட்டனும் இதே அழைப்பை விடுத்திருந்தது.

காங்கோவுக்கான ஐ. நா ஆலோசனைக் கமிட்டியில் யு தாண்ட் பேசுகையில் பிரிட்டனின் அழைப்பையேற்று தாம் ரொடிஷியாவுக்கு விஜயம்செய்வதால் உருவான பலன் ஏற்படுமாவென்பது சந்தேகமென்று தெரிவித்தார்.

கிரிக்கெட்

## இந்தியாவுக்கு 276 ரன்கள்

சென்னை, ஜன. 10

இங்கிலாந்து கோஷ்டிக்கும் இந்தியக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின் ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் விளையாட்டுப் போட்டி இன்று காலைசென்னை கார்ப்பரேஷன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

முப்பதினாயிரம் கிரிக்கெட் விளையாட்டு ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்ற ஐந்தாவது ‘டெஸ்ட்’ போட்டியின் முதல் நாளான இன்றைய ஆட்ட முடிவில் இந்தியக் கோஷ்டி முதல் இன்னிங்சில் ஏழு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 296 ரன்களை எடுத்தது.

பட்டோடி 103ரன்களும் கண்ட்ராக்டர் 86 ரன்களும் எடுத்தனர்.

## இன்று

மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இலக்கிய நண்பர்கள் சந்திப்பு. இணுவையூர் செ. நடராஜன் எழுதி வெளியிட்ட “இளங்கோவின் கனவு” நூல் அறிமுகம்.

## ரூ. 35 கோடி செலவிடப்படும்

புதுடில்லி, ஜன. 10

பின் தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்துக்காக அடுத்த ஐந்து ஆண்டுகளில் 35 கோடி ரூபாய் செலவிடுவதென் மத்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## விடுதலை செய்ய உத்தரவு

நாகபுரி, ஜன. 10

நாகபுரி இந்துத் தினசரிப்பத்திரிகையின் ஆசிரியர் திரு அகர்வாலை தடுப்புக்காவலிலிருந்து உடனடியாக விடுதலை செய்யுமாறு சுப்ரீம் கோர்ட் இன்று உத்தரவிட்டது.

## இன்று உதவிமேயர் தேர்தல்

யாழ்ப்பாணம், வியாழன்

இன்று மாலை யாழ்ப்பாணம் மாநகரசபை உதவிமேயர் தேர்தல் நடைபெறவிருக்கிறது. பெரும்பான்மைக் கோஷ்டி சார்பில் திரு ஏ. நடராசா உதவி மேயர் பதவிக்குப் போட்டியிடுவாரெனவும் மற்றைய கோஷ்டி சார்பில் வேறு ஒருவரும் போட்டியிடலாமெனவும் தெரிகிறது.

## மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டார்

கொழும்பு, புதன்

ஜனவரி 5-ந் திகதிவேலைக்கு வராதிருந்த காரணத்துக்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த கொழும்பு மாநகரசபை என்ஜினியர் திரு பெர்னன்டோவை மீண்டும் வேலையில் அமர்த்துவதற்கு கொழும்பு மேயர் முடிவு செய்துள்ளார்.

திரு. பெர்னண்டோ வேலைக்கு செல்லாதிருந்த நாட்களுக்கும் அவருக்குரிய சம்பளத்தைப் பெறமாட்டார்.

## புரட்சித்தலைவருக்கு மரண தண்டனை

சியோல், ஜன. 10

சென்ற மே மாதத்தில் தென் கொரியாவில் ராணுவப்புரட்சிக்குத் தலைமைவகித்து புரட்சி சபையின் தலைவராகவிருந்த ஜெனரல் சாங்கிற்கு தென் கொரிய ராணுவ நீதிமன்றம் இன்று மரண தண்டனை விதித்தது

ஜெனரல் சாங் எதிர்ப் புரட்சி ஒன்றை நடத்தத் திட்டமிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

## 21 பேர் மாண்டனர்

லண்டன் ஜன. 10

அங்கோலாவில் தேசியவாதிகளுக்கும் போர்ச்சுக்கீஸிய சிப்பாய்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் 21 தேசியவாதிகள் மாண்டனர்.

## ஆசிரிய இடமாற்றங்களில் உதவி வித்தியாதிபதிகளுக்குப் பங்கில்லை

### தலைமைக் காரியாலயத்திற்கே அதிகாரம் உள்ளது

கொழும்பு, புதன்

மாகாண உதவி வித்தியாதிபதிகள் இனிமேல் ஆசிரிய நியமனங்களிலும், இடமாற்றங்களிலும் தலையிட முடியாது எனத் தெரிகிறது. பள்ளிக்கூடம் தரம் பிரிக்கும் திட்டத்தின் கீழ், உதவி வித்தியாதிகளுக்கு ஆசிரிய நியமனத்திலும் இடமாற்றத்திலும் தலையிட அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அண்மையில் செய்யப்பட்ட இடமாற்றங்கள் பற்றித் தமக்கு அறிவிக்குமாறும், ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்வதை நிறுத்தும்படியும் வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி. சில்வா உதவி வித்தியாதிபதிகளைக் கேட்டுள்ளார்.

ஆசிரியர்களின் இடமாற்றங்களை இனிமேல் கொழும்புக் காரியாலயமே செய்து வருமென வித்தியாதிபதி தெரிவித்துள்ளார்.

ஒழுங்கு நடவடிக்கை காரணமாக ஆசிரியர்களை இடம்மாற்ற நேரிடுமாகையால் ஒவ்வொரு தடவையும் அறிக்கையனுப்புமபடி உதவி வித்தியாதிபதிகளை வித்தியாதிபதி கேட்டுள்ளார்.

## அநுராதபுரம் எம். பி. காலமானார்

அநுராதபுரம், புதன்

அநுராதபுரத் தொகுதி எம். பி. திரு. சிறிமேவன் கொடகே இன்று காலை காலமானார். திரு. கொடகே சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

## கி. சபைகள் திருத்த மசோதா பார்லிமெண்டில் நிறைவேறியது

கொழும்பு, புதன்

கிராமசபைகள் திருத்த மசோதா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் 50 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. நேற்றிரவு நீண்ட நேர விவாதத்துக்குப் பின் ஒத்திவைக்கப்பட்ட இந்த திருத்த மசோதாவின் மீதான விவாதம் இன்று நடைபெற்றது.

## நிர்வாகம் யார்கையில்?

### —திரு. பீட்டர் கெனமன்

கொழும்பு, புதன்

“இன்று நாட்டின் நிர்வாகம் இராணுவத்தினிடமா அல்லது சிவில் அதிகாரிகளிடமா இருக்கிறது என்பது பற்றி அறிய முடியவில்லை” என திரு. பீட்டர்கெனமன் கூறினார்.

“5-ம் திகதி நடைபெற்ற அடையாள வேலைநிறுத்தத்தில் பெருந்தொகையான தொழிலாளர் கலந்து கொண்டனர். ஆனால் இலங்கை வானொலியில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்துவிட்டு பின்னர் 6-ம் திகதி வேலைக்குத் திரும்பியபோது வாசலில் நின்ற கடற்படையினர் கடற்படையின் கமாண்டரிடமிருந்து உத்தரவு பெற்றபின்னரே உள்ளே நுழைய முடியும் எனத் தெரிவித் திருக்கின்றனர். இலங்கை வானொலியின் பொறுப்பை இப்பொழுது யார் ஏற்று நடத்துகின்றார்கள். ராணுவமா, கடற்படையா? என திரு. பீட்டர்கெனமன் கேட்டார்.

### பயமுறுத்தும் சுற்றறிக்கை

திரு. பெர்னட்சொய்சா: திறைசேரி பயமுறுத்தும் சுற்றறிக்கையை சமீபத்தில் அனுப்பியுள்ளது. 5-ம் திகதி வேலைநிறுத்தம் செய்த ரசாங்க ஊழியர்களைப் பழிவாங்கும் விதத்தில் இச் சுற்றறிக்கை அமைந்துள்ளது. 5-ம் திகதி வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு முற்பணம் கொடுக்கக் கூடாதென இலாகாத் தலைவர்கள் இச் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளார்கள். வேலைநிறுத்தம் செய்தவர்களின் சம்பள உயர்வு பதவி உயர்வு முதலியவை நிறுத்தப்பட வேண்டுமெனவும்

(8-ம் பக்கம் பார்க்க)

# ‘என் தந்தை துணிவுடையவர்’

## பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் திரு. டட்லி உரை

கொழும்பு, புதன்

“நாட்டுக்குத் தேவையான மக்களை உண்டுபண்ணுவதே கல்வியின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். அரசாங்கத்தின் கல்விக்கொள்கை பற்றி அதிகம் பேசலாம். ஆனால் அதற்கு இது தகுந்த இடமல்ல.”

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா, காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயகாவின் ஞாபகார்த்தமாக மருதானையில் நிறுவப்பட்டுள்ள இரு பள்ளிக்கூடங்களினதும் எட்டாவது ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினார். திரு. டட்லி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: கைத்தொழில் திட்டங்களைக் கொண்டு நடாத்துவதற்குப் போதிய மாணவர்களுக்குத் தொழில்நுட்பப் பயிற்சியளிக்கவேண்டும். இந்த இருபள்ளிக்கூடங்களும் கடந்த எட்டு ஆண்டுகளில் நன்கு தேர்ச்சியடைந்துள்ளன.”

மருதானையிலுள்ள பெண்களுக்கான கைப்பணிப் பள்ளிக்கூடமும், ஆங்கில பள்ளிக்கூடமொன்றும் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயக்காவின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டன

தனது தந்தையின் திறம் பற்றிப் பேசுகையில் திரு. டட்லி கூறியதாவது:-

எனது தந்தை அதிகம் தன்னம்பிக்கையுடன் வாழ்ந்தார். ஒருசமயம் அவர் மிகத் தைரியத்துடன் காசநோயாளர் ஒருவருடைய அறைக்குள் சென்று, அவரைத் தூக்கிக்கொண்டு ஆறு மைல்கள் தூரத்திலுள்ள ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார். இவரது தைரியம்மிக்க தன்மையே அரசியல் துறையிலும் அவருக்கு வெற்றியளித்தது.”

மொழிப் பிரச்சினைபற்றிப் பேசுகையில், “தாய்மொழிக்கு முதலிடம் வழங்க வேண்டும்; ஒரு உலக மொழிக்கு இரண்டாமிடம் வழங்கவேண்டும்” என்றார்.


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


### தற்காலிக கல்விமந்திரி

கொழும்பு, புதன்

கல்விமந்திரி திரு. பதியுதீன் முகம்மது வெளிநாடு சென்றிருக்கும் சமயத்தில் அவருக்குப் பதில் தற்காலிகக் கல்விமந்திரியாக திரு. வி. டி. ஜி. கருணரத்ன கல்விமந்திரியாகக் கடமையாற்றுவார்.


**10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன! இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன! எவை?**

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. DOLLAR BRAND

**பவுண் அடையாளம் உள்ள அலுமினியப் பாத்திரங்களே! ஏன்?**

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

**உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!**

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள் எங்கும் கிடைக்கும்.

**டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!**

தயாரிக்குமிடம்:

**அலுமினிய இன்டஸ்ரீஸ் லிமிட்**

மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்

J. D


# ஜிம்கான சுவீப் முதல் பரிசு விவசாயிக்கு கிடைத்தது

அப்புத்தளை, புதன்

டிகானரென்ன என்ற இடத்தைச் சேர்ந்த பி. எம். செனிவரத்ன (25 வயது) என்ற விவசாயிக்கு கடந்த மாதம் நடைபெற்ற காலி ஜிம்கான சுவீப்பில் முதல் பரிசுத் தொகையான ரூ. 150, 088 கிடைத்துள்ளது.

ஆஸ்பத்திரி சுவீப்பின் பண்டாரவளை ஏஜண்ட் திரு. தனசிறி குலசூரியா, செனிவரத்னவை அணுகி காலி ஜிம்கான சுவீப் பொன்று வாங்கும்படி கேட்டார். ஆனால் செனிவிரத்ன அதை விரும்பாமல், ஆஸ்பத்திரி சுவீப் டிக்கட் ஒன்றைப் பெற்றுக்கொண்டார். அந்தக் கட்டத்தில் கூட செனிவரத்னவை, அதிர்ஷ்ட தேவதை விட்டபாடில்லை.

குலசூரியா மீண்டும் மீண்டும் வற்புறுத்தி காலி ஜிம்கான சுவீப் டிக்கட் ஒன்று வாங்கும்படி கேட்டார். செனித்வரத்னவும் மனம் மாறி காலி ஜிம்கான சுவீப் டிக்கட் ஒன்றைப் பெற்றுக் கொண்டு, முதல் பரிசையும் தட்டிக்கொண்டார்!

# தமிழகமும் பொதுத்தேர்தலும்

# பலம் பொருந்திய எதிர்க்கட்சி வேண்டுமென கட்சிகள் விரும்புகின்றன

தமிழகத்தின் பொதுத் தேர்தலில் பலமுள்ள எதிர்க்கட்சியொன்று அமையவேண்டிய தன் அவசியத்தை பல கட்சியினரும் வலியுறுத்திவருகின்றனர். இதனை காமராஜர் கட்சியை ஆதரிக்கும் பெரியார் ஈ. வே. ரா. கூட அப்பட்டமாக சொல்லிவருகிறார்.

தமிழகத்தில் இந்தத் பொதுத் தேர்தலின் போதாவது காங்கிரசை எதிர்க்கப் பல கட்சிகள் கூட்டுச்சேர எடுத்துக்கொண்த் முயற்சிகள் எதுவித பயனையும் இதுவரையில் தரவில்லை. பொதுத்தேர்தலின் பின்னராவது இத்தனை கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து தமிழக அரசாங்கத்தை அமைக்கமுடியாவிட்டாலும் பலம் பொருந்திய எதிர்க்கட்சியையாவது உருவாக்கிக்கொள்ளும் என்பது பொறுத்திருந்து தான் தெரிந்துகொள்ளவேண்டும்.

சுதந்திரா, தி. மு. க. கூட்டு முறிந்துவிட்டது. தி. மு. க. தமிழ்த் தேசியக் கட்சி எப்பொழுதுமே கூட்டுச் சேரமாட்டாதென நம்ப இடமிருக்கிறது. இவற்றுடன் கம்யூனிஸ்ட் சேர்ந்துகொள்வது அசாத்தியம்.

தமிழரசுக் கழகமும் தமிழ்த் தேசியக் கட்சியும் ஒன்றுசேர்ந்தாலும் காமராஜர் இருக்கும் வரையில் இக்கட்சிகளுக்கும் காங்கிரசுக்கும் பெரியார் பாலம் அமைத்துக் கொண்டே இருப்பார் போலத் தோன்றுகிறது. ஆனால் தமிழரசுக்கழகம் தேர்தலில் போட்டியிலிருந்து விலகிக்கொண்டுள்ளது.

பலமுள்ள எதிர்க்கட்சியொன்றின் தேவையைப் பதவியிலிருந்து விலக்கப்பட்டவுடன் நாட்டு மக்களுக்கு நாளுக்கு நாள் உபதேசம் செய்யத் தொடங்கிய ராஜாஜி 1957-ம் ஆண்டில் பின்வருமாறு கூறியிருச்கிறார்:- நானே எதிர்க்கட்சியொன்றைத் தோற்றுவித்து நடத்தமாட்டேன். ஏனென்றால் நான் ஒரு விசுவாசமுள்ள காங்கிரஸ்வாதி. ஆனால் சுதந்திரகட்சியை ராஜாஜியேஆரம்பித்து காங்கிரசுக்கு எதிராக ஒரு போராட்டமே நடாத்திவருகிறார் ‘சுதந்திராக் கட்சி போன்ற பழங்கால அமைப்பைக் காலவெள்ளம் கணநேரத்தில் அடித்துச் சென்றுவிடும்’ என அரசியல் வானில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்தேசியக் கட்சித்தலைவர் திரு. ஈ. வெ. கி. சம்பத் அண்மையில் சென்னையிலே ஒரு கூட்டத்திற் பேசியதாவது:-

“தொடர்ந்தாற் போல் காங்கிரஸ் ஆட்சி நீடித்துவந்திருப்பதனால் ஏற்பட்டுள்ள கேடுகளை அறிந்திருக்கிறோம் அதுஒன்றையே வைத்துககொண்டு பெரிய இடங்களைப்பிடித்துவிட வேண்டுமென்ற ஆசைகளை வளர்த்துக்கொள்வது நல்லதல்ல. அந்த இடங்களைப் பெறுவதற்கான தகுதிகளை வளர்த்துக்கொள்ளவேண்டும்”

காமராஜர் கட்சியை ஆதரிக்க வேண்டுமென்ற தீர்மானம் சென்றவாக்காளர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தி. மு. க. வில் திரு. சம்பத்தின் துறவையடுத்து பலர் பிரிந்திருக்கிறார்கள். அதே வேளையில் சென்னையில் தி. மு. க. விற்கு ஆதரவு அதிகம் குறைந்துவிடவில்லையென்பதும் தெரிகிறது. ஆனால் இப்பொதுத் தேர்தல் தி. மு க. விற்கு ஒரு சோதனை!

பல்வேறுகட்சிகளின் எதிர்ப்புக்களும் இக்கட்சிக்கு இருக்கிறது. இவ்எதிர்ப்புக்கள் இதன் வெற்றிக்கு அதிகம் இடையூறாக இருக்குமென்று சொல்வதற்கில்லை.

இந்நிலையில் பலம்பொருந்திய எதிர்க்கட்சியொன்றை தமிழகத்தில் ஏற்படுத்துவது சாத்தியமா? இதன் முடிவு மிக விரைவில் தெரிந்து விடும். இதன்பின்னர்தான் மாற்று அரசாங்கம்பற்றி தெரிந்து கொள்ளவேண்டும்.

### காங்கிரஸிலிருந்து எம். எல். ஏ. விலகுகிறார்

அசெம்பிளியின் பவானியைச் சேர்ந்த மெம்பரான திரு. பி. ஜி. மாணிக்கம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார். “நடைபெறப்போகும் தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் சுயேச்சை அபேட்சகராக அந்தியூர்

(5-ம் பக்கம் பார்க்க)

# “புகைப்படத்தை முதலாளியிடம் கொடுக்குமாறு கூறினர்”

## கொலை வழக்கில் சாட்சியம்

கம்பஹா, புதன்

“திரு. பதிராஜாவின் விதவை குசுமமலாதா, ஒரு முதலாளியுடன் காதல் கொண்டிருந்தார். என்னிடம் ஒரு முறை, குசுமலாதா தனது புகைப்படமொன்றைக் கொடுத்து, அந்தப் புகைப் படத்தை முதலாளியிடம் சேர்ப்பிக்குமாறு கூறினர்.”

கம்பஹா அடிஷனல் மாஜிஸ்திரேட் திரு. எஸ். டி. ஜயசுந்தரா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட பதிராஜா கொலை வழக்கில், வியாங்கொடை ராஜவத்தையைச் சேர்ந்த எல். ஏ. குணதிலகா என்பவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி, குறிகொட்டுவ முன்னாள் ஜே. பி, திரு. எஸ். பி. எஸ். பதிராஜா நித்திரை செய்துகொண்டிருந்த சமயம், அவரது கழுத்தை வெட்டிக் கொலை செய்ததாக ஜி. ஜோசப் பெரேரா, கே. ஜி. மைக்கல் அலியஸ், பொன்சேகா அலியஸ், ஸ்ரீபன் ஆகியோர்மீது குற்றம் சாட்டி இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. பதிராஜாரா கொலைக்கு உடந்தையாக இருந்ததாக ஈ. ஏ. டொன சபின் நோனு எக்கநாயக்கா, ஹமைன் அலியஸ் கொறிகொட்டுவ ஹமைன் டி. ஏ. குசுமலாதா திஸநாயக்கா (பதிராஜா விதவை) ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின்போது எல். ஏ. குணதிலகா மேலும் தெரிவித்ததாவது:-

“1958-ம் ஆண்டு நடைபெற்ற வகுப்புக் கலவரத்துக்குப் பின்னர் நான் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து, குறிக்கொட்டுவ குணசேகரா முதலாளிக்குச் சொந்தமான ‘பேக்கரி’ ஒன்றில் வேலைக்கமர்ந்தேன். அந்தப் பகுதியிலுள்ள சாலைகளுக்கும், கடைகளுக்கும் பாண் விநியோகிப்பது தான் என் வேலை. குணசேகரா முதலாளியின் வீட்டுக்கு அருகில் இருந்த குசுமலாதா, என்னிடம் பாண் வாங்குவது வழக்கம்.

ஒருநாள் குசமலாதா என்னைச் சந்தித்து, தன்னை வந்து பார்க்குமாறு முதலாளியிடம் சொல்லும்படி என்னைக் கேட்டார். இதை நான் முதலாளியிடம் போய்ச் சொன்னேன். முதலாளியும் இதற்கு இணங்கி அதற்கான ஒரு நாளைக் குறிப்பிட்டார். பின்னர், குசுமலாதா புகைப் படம் ஒன்றைத் தந்து அதை முதலாளியிடம் சேர்ப்பிக்குமாறு கூறினர்.”

### மாந்தை தெற்கு கிராமக் கமிட்டி தேர்தல் முடிவுகள்

மன்னார், புதன்

மாந்தை தெற்கு கிராமக் கமிட்டித் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:-

1வது வார்டு: திரு. ஏ எல் டப்ரேரா (போட்டியில்லை), 2வது வார்டு: திரு டி தனநாயகம், 3வது வார்டு: திரு. டி கனகரத்னம், 4வது வார்டு: திரு. எஸ் காஸ்வர் (போட்டியில்லை), 5வது வார்டு: திரு. ஏ செபமாலை, 6வது திரு. ஏ செபமாலை (போட்டியில்லை), 7வது வார்டு: திரு. எம் செபமாலை (போட்டியில்லை), 8வது திரு. எஸ் சந்தியா (போட்டியில்லை), 9வது வார்டு: திரு. எம் பிலிப்புனேரி (போட்டியில்லை), 10வது வார்டு: திரு. எஸ் கிராமண்ட் (போடடியில்லை), 11வது வார்டு: திரு. பி சந்தன் (போட்டியில்லை), 12வது வார்டு: திரு எஸ் மார்க்கண்டு (போட்டியியில்லை), 13வது வார்டு: திரு. ஆர் சூசைநாதன் (போட்டியில்லை), 14வதுவார்டு: திரு. எம் எம் குருஸ் (போட்டியில்லை), 15வது வார்டு: திரு. எஸ் புஸ்த்தியாம்பிள்ளை, (போட்டியில்லை)

### இடமாற்றம்

பருத்தித்துறை நீதிமன்றக் காரியதரிசி திரு. வி. துரைராசா நீர்கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இரத்தினபுரியில் கடமையாற்றிய திரு. எஸ். நடனகுருசாமி காரியதரிசியாகப் பருத்தித்துறை நீதிமன்றத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுடில்லி, ஜன 10

கில்ஜிட்டில் 4000 சதுர மைல் பிரதேசத்திற்கு சீன உரிமை கொண்டாடுவதுபற்றித் தமக்குத் தெரியாது என பாகிஸ்தான் வெளிவிவகார இலாகா மறுத்திருக்கிறது.

# கோவா: அமெரிக்க சுருதி இறங்கிவருகிறது!

## 'இந்தியாவுக்கு சேர்ந்தது என்பதே யு. எஸ். கொள்கை'

### கென்னடியின் விசேஷ தூதர் விமர்சனம்

புதுடில்லி, ஜன. 10

"கோவா ஒரு காலனியாக இருந்ததென்பதும், அது இந்திய மண்ணிலிருந்ததென்பதுமே அமெரிக்காவின் கருத்து" என ஜனாதிபதி கென்னடியின் விசேஷ தூதர் திரு. ஹென்றி கிலஞ்சர் இங்கு உலகவிவகாரசபையில் பேசும்போது குறிப்பிட்டார்.

"இப்பிரச்சினையை இருநாடுகளும் வெவ்வேறு கோணத்திலிருந்து நோக்கியதே அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே கருத்துவேற்றுமை ஏற்படக் காரணம்.

கோவா ஒரு காலனி என்பதும், அது இந்தியாவுக்குத் திரும்பவேண்டும் என்பதுமே எனது சொந்தக் கருத்தாகும். கோவாப் பிரச்சினையைத் தீர்க்க பாரதத்துக்கு வேறுவழி இருந்ததென என்னல் கூற முடியாது பாரதத்தைக் குறை சொல்பவர்கள் அந்நாட்டின் நண்பர்களே தவிர எதிரிகளல்ல" என்றும் திரு. கிலஞ்சர் கூறினர்.

காஷ்மீர் பற்றி அவர் குறிப்பிடுகையில், இந்தியாவும் பாகிஸ்தானும் அமெரிக்காவின் நண்பர்கள் என்றும் எனவே இப்பிரச்சினை சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டும் என அமெரிக்கா விரும்புவதாயும் கூறினர்.

கோவாவில் ராணுவ நடவடிக்கை எடுத்ததுபற்றி இந்தியாவைக் குறைகூறுவோர், நடவடிக்கையில் இறங்காவிட்டால் போர்த்துக்கலின் நண்பர்கள் அதை அந்நியத் தளமாகப் பாவித்திருப்பார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் பம்பாயில் கூறினர்.

### சமய வைபவத்தில் சிக்கனத்தை கையாள வேண்டுகோள்

ஹபறடுவ, புதன்

"சமய வைபவங்களில் சிக்கனமான முறையில் செலவு செய்து, பொது மக்களுக்கோர் எடுத்துக் காட்டாக பௌத்த குருமார் விளங்க வேண்டும்" என்று அகங்கமையில் நடைபெற்ற கூட்டமொன்றிற்குத் தலைமை வகித்த காலி-மாத்தறை தறுண பிக்கு சங்கமயாவின் தலைவர் பண்டித தலரும்பி பியரதானதேரோ கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:-

"மரணச்சடங்குகளின்போது, பிக்குமார் நடந்து செல்வதற்காக, சீலை விரிக்கப்படுவது தடை செய்யப்பட வேண்டும். இவற்றுடன் அநாவசியமான முறைகளில் பணம் செலவிடப்படுவதையும் சங்கம் கண்டிக்கிறது."

### வவனியா உதவிகமிஷனர்

மன்னர், புதன்

வவனியா ஸ்தலஸ்தாபன உதவிக்கமிஷனர் மன்னர் நகர சங்கத்தலைவரைத் தெரிவுசெய்வதற்கான நாளாக இம்மாதம் 20-ந் திகதியைக் குறிப்பிட்டுள்ளார்.

## லாவோஸில் பல முனைகளில் வடவியட்னும் பிரவேசம்?

வாஷிங்டன், ஜன. 10

லாவோஸில் பல முனைகளில் வட வியட்னும் துருப்புகள் பிரவேசித்திருப்பதாய் வலதுசாரி அரசாங்கம் அறிவித்தது. ஆனல் அங்குள்ள அமெரிக்கத் தூதராலயம் இதை மறுத்திருக்கிறது. தென் வியட்னமில் நிலைமை மோசமானல்தான் அங்கு அமெரிக்கத் துருப்புக்களை அனுப்புவது பற்றி முடிவுசெய்யப்படுமென வாஷிங்டன் செய்தி ஒன்று கூறுகிறது.

### இரியானில் டச்சுப் படை பலப்பெருக்கம்

ஜகர்த்தா, ஜன. 10

மேற்கு இரியனின் டச்சு ராணுவ பலம் பெருக்கப்பட்டு வருவதாய் ஒரு செய்தி கூறுகிறது.

∴ ∴ ∴

இந்தோனேஷிய ஜனதிபதி டாக்டர் சுகர்னேவைக் கொலை செய்ய முயற்சித்தவர்கள் முன்னுள் டச்சு காப்டன் வெஸ்டர்லிங்கின் ஆட்கள்தான் என இந்தோனேஷிய அரசாங்கம் கூறியிருக்கிறது.

### சுவிடிஷ் தூதர்

கொழும்பு, புதன்

இலங்கையில் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் சுவீடிஷ் தூதர், நேற்று தம் நியமனப் பத்திரங்களை கவர்னர் ஜெனரலிடம் சமர்ப்பித்தார்.

### விமான நிலைய விஸ்தரிப்பு வேலை

சென்னை, ஜன 3

மீனம்பாக்கம் விமான நிலைய விஸ்தரிப்புக்காக, 110 ஏக்கர் நிலத்தை சிவில் விமானப் போக்குவரத்து இலாகாவிடம் ஒப்படைக்க தற்காப்பு இலாகா காலந்தாழ்த்தி முன்வந்திருப்பது வரவேற்கப்பட்ட போதிலும், விமான நிலைய அதிகாரிகள் இதனல் பெரிதும உற்சாகம் அடைந்துவிடவில்லை என்றே சொல்லவேண்டும்.

பம்பாய், டில்லி போன்ற இடங்களிலுள்ள நிலையங்கள் பொயிங்விமானங்களுக்கு ஏற்ற வகையில் எப்போதோ விஸ்தரிக்கப்பட்டுவிட்டன. இந்த இடத்தை மாற்றிக் கொடுப்பது சம்பந்தமாக தற்காப்பிலாகாவுக்கும் சிவில் விமான போக்குவரத்து இலாகாவுக்குமிடையில் இருந்துவந்த தகராறே, சென்னை நிலையம் இதுகாறும் விஸ்தரிக்கப்படாததற்குக் காரணம். இப்போது இந்தக் காரணமும் நிவர்த்தியாகிவிட்டது. இருப்பினும், சிவில் விமானப் போககுவரதது அதிகாரிகள் போதிய சுறுசுறுப்பு காட்டாத காரணத்தினல், மீனம்பாக்கத்தில போயிங் விமானம் வந்து போகும் வசதி ஏற்பட வெகுநாளாகும் போல் தோன்றுகிறது.

### பம்பாயில் புதிய கப்பல் திருத்தும் தளம்

பம்பாய், திங்கள்

இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் இங்கு புதிய கப்பல் திருத்தும் தளம் ஒன்றை இன்று காலை ஆரம்பித்து வைததார். இந்திய கடற்படை விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் இந்தக் கப்பல் திருத்தும் தளம் அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### ரஷ்ய பார்லிமெண்ட் விரிவுபடுத்தப்படும்

மாஸ்கோ, ஜன. 9

ரஷ்யாவில் 4 ஆண்டுகளுக்கு முன் தேர்தல் நடைபெற்ற பின்னர் மக்கள் தொகை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்திருப்பதால் ரஷ்யாவின் பார்லிமெண்ட் விரிவுபடுத்தப்படும் என ரஷ்ய அரசு நாளிதழான 'இசுவெசுதியா' தெரிவித்துள்ளது. அடுத்த மார்ச் மாதம் 18-ம் திகதியன்று புதிய தேர்தல்கள் நடைபெறும் என்றும் அப்பத்திரிகை கூறியது.

ரஷ்யாவின் மக்கள் தொகை இப்பொழுது 20 கோடிக்கு மேலாக இருக்கிறது.

### "ஐயோ பாவம்"

ஜம்மு, ஜன. 10

கிழக்கு ஜம்முவில் பிரம்மாண்டமான வெட்டுக்கிளிக் கூட்டம் பறந்து வருவதைக் கண்ட குரங்குகள் எல்லாம் நடுநடுங்கி, வாலைச் சுருட்டிக் கொண்டு சமையலறைக்குள் புகுந்து பதுக்கிக்கொண்டன. தாவிக் குதிக்கும் குரங்குகள் சாதுவாக வீட்டுப் பூனைபோல வருவதைக் கண்ட பெண்களும் 'ஐயோ பாவம்' என்று விட்டுவிட்டனர். வெட்டுக்கிளிப் படை பறந்து போய், வானம் வெளுத்த பின்னரே குரங்கினம் வெளியே தலை காட்டியது.

### பெல்ஜிய விமானம் திருப்பிக் கொடுக்கப்படும்

மாஸ்கோ, ஜன. 10

தாம் தடுத்துவைத்திருந்த பெல்ஜிய விமானத்தையும், அதிலிருந்த 19 பிரயாணிகளையும் திருப்பிக் கொடுக்க ரஷ்யா இணங்கியிருக்கிறது. ஆயினும் தன் பிரதேசத்தில் அத்துமீறிப் பறந்ததற்காக ரஷ்யா பெல்ஜியத்திடம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

### உலகில் வெள்ளிப்பற்றுக்குறை

லண்டன், ஜன. 10

உலகில் தற்போது வெள்ளி பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. வெள்ளி விற்பனையைத் தற்காலிகமாக ரத்துச்செய்ய அமெரிக்க சர்க்கார் முடிவு செய்ததன்மூலம் இந்நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

வெள்ளிசப்ளைக்கு இனி மெக்ஸிக்கோவையும், கம்யூனிஸ்ட் சீனவையும் பிரதானமாக எதிர்நோக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

-----

புதுடில்லி, ஜன 10

பர்மியப் பிரதமர் ஊநூ நாளை காட்மாண்டுவிலிருந்து புதுடில்லி வந்துசேருவார். இந்தியாவில் அவர் 6 நாட்கள் தங்குவார். நேபாளத்தில் திரு. ஊநூ நேற்று பத்திரிநாத் ஆலயத்துக்கு விஜயஞ் செய்தார்.

## "தக்கசமயத்தில் அஜாத் காஷ்மீரை இந்தியா தாக்கும்

### இந்தியா-பாக். சண்டையை வேடிக்கைபார்க்க குருஷ்சேவ் விரும்புகிறர்"

— யார்க்ஷயர் போஸ்ட்

(இங்கிலாந்து). ஜன. 10

இந்தியா தகுந்ததருணத்தில் காஷ்மீரில் பாகிஸ்தான் வசம் உள்ள பகுதியைத் தாக்கும் என்று எண்ணுவதற்குப்போதுமான காரணம் இருப்பதாக "யார்க்ஷயர் போஸ்ட்" கூறியது.

காஷ்மீரில் இந்தியப்படைகளுக்கும், பாகிஸ்தான்படைகளுக்குமிடையே மோதல் ஏற்படின், இந்தச்சண்டை சுலபமாக மற்ற இடஙகளுக்கும், பரவும். மேற்கு நாடுகளுக்கு மிகவும் தர்மசங்கடமான நிலைமை ஏற்படும்" என்று இந்த கன்சர்வேட்டிவ் பத்திரிகை எச்சரிக்கை செய்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:-

"மேற்குப் பாகிஸ்தான் எல்லையோரமாக இந்தியத் துருப்புகள் குவிந்திருப்பதாக பாகிஸ்தானில் வெளியாகியுள்ள செய்திகளை இந்திய அதிகாரிகள் மறுத்துள்ளனர். எனினும் பாகிஸதானுக்குப் பீதி ஏற்பட்டிருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை. கோவாவை 'விடுதலை' செய்ததன் விளைவாக இந்தியத்துருப்புகள், டாங்கிகள் முதலியவற்றின் பலத்தை அலட்சியம் செய்வதற்கில்லை. ஆகவே பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரை 'விடுவிப்பதற்கு' இந்தியா நடவடிக்கை எடுப்பது சாத்தியமே. காஷ்மீர்ப் பிரச்சினை நேருவுக்குமிகவும் தொந்தரவு கொடுத்துவருகிறது. ஆகவே, நேரு இந்தச்சந்தர்ப்பத்தில் பொறுமை இழந்து இருக்கவேண்டும்.

அரசியல் ராணுவ ரீதியில் தருணம் வந்துவிட்டதாக இந்தியா கருதுகையில் அது பாகிஸ்தான் வசம் உள்ள காஷ்மீரைத் தாக்கும் என்று எண்ணுவதற்குக் காரணம் இருக்கிறது. ஆனல் பாக். காஷ்மீரை இந்தியா தாக்குவதன் மூலமாக மேற்கு நாடுகளுக்கு மிகவும் தர்மசங்கடமான நிலைமை ஏற்படும். பாகிஸ்தான் காமென்வெல்தைச்சேர்ந்தநாடு என்பது மாத்திரமல்ல அது தென் கிழக்கு ஆசிய (சீட்டோ) ராணுவக் கூட்டிலும், 'ஸென்டோ' ராணுவக்கூட்டிலும் இதர ராணுவ ஒப்பந்தங்களிலும் சேர்ந்திருக்கிறது.

முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக உள்ள காஷ்மீர் மீது இந்தியாவுக்குப் பாத்தியதை உண்டு என்று நேருஜி கருதினல், முதலில் அவரே ஐ. நா. விடம் முறையீடுசெய்து, அதன் தீர்ப்புகளுக்குக்கட்டுப்பட வேண்டும்.

காஷ்மீர்ப்பிரச்சினை சம்பந்தமாக சுயநிர்ணய உரிமைக் கொள்கையில், நேருவுக்கு நம்பிக்கை இருப்பின், அவர் அந்த விஷயத்திற்காகவும், ஐ. நா. வை அணுகவேண்டும்; அதாவது காஷ்மீரின் மாஜிப் பிரதமர் ஷேக் அப்துல்லா வற்புறுத்தும் சுயநிர்ணயக்கோரிக்கைகளைப்பரிசீலனை செய்யுமாறு நேருஜி ஐ. நா. வைக் கேட்டுக் கொள்ளவேண்டும். பாகிஸ்தானுடன் சேர்ந்துகொண்டு சதியாலோசனை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஷேக் அப்துல்லா 1958-ம் வருடத்திலிருந்து விசாரணை செய்யப்பட்டுவருகிறர்.

காஷ்மீர் பற்றி இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே போர்ஏற்பட்டால், நடுநிலைமையில் இருந்துகொண்டு, வேடிக்கை பார்க்கவேண்டும் என்பதுதான் குருஷ்சேவின் திட்டம். இதை மேற்குநாடுகள் உணர்ந்திருக்கின்றனவா?"

## வான்சேவையில் ஏற்பட்டுள்ள தலையீடு

### பிரயாணிகளுக்கு கஷ்டம்

முள்ளியவளை, புதன்

மாங்குளம் — வலைஞர்குளம் ரஸ்தாவில், பிரயாணிகள் தமது பிரயாணத்துக்கு நம்பியிருப்பது, 'வான்' சேவையை மட்டுமே. அதிலும் இப்போது தலையீடுகள் ஏற்பட்டுள்ளதால பிரயாணிகள் கஷ்டமுறுவதாகத் தெரிகிறது.

குறித்த பாதையில் 'வான்' சேவை நடத்துவது சம்பந்தமாக இரு சாராருக்கிடையே பகைமை வளர்ந்துள்ளதாகவும், ஒரு பகுதியினரை இன்னொரு பகுதியினர் பயமுறுத்தி 'வான்' சேவைகளில் தடங்கல் உண்டாக்குவதாகவும், இதனல் பொதுமக்கள் பிரயாணஞ் செய்ய முடியாது தவிக்க வேண்டியுள்ளதாகவும் கூறும் மகஜரை அப்பகுதிப் பிரயாணிகள், வவனியா அரசாங்க அதிபருக்கும், பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த வீதியைத் திருத்தி, இ. போ. ச. பஸ்ஸைச் சேவைக்கு விடவேண்டுமெனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

### கொம்புமுளைத்த குழந்தை

கடலாடி, ஜன. 10

கடலாடி வட்டாரத்தைச் சேர்ந்த ஆப்பனூர் கிராமத்தில் மான்முகத்தைப்போன்றும் தலையில் 2 கொம்புகளுடனும் ஆமைக்கால்களுடனும் ஒரு குழந்தை பிறந்ததாகவும் இக் குழந்தை பிறந்து 3 நிமிஷம்வரைதான் உயிருடன் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

### அடினேரும் மாக்மில்லனும்

பொன், ஜன. 10

பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லனும, மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் அடினேரும் இங்கு பேச்சுவார்த்தைகள் நடத்தியபின், மேற்கு ஜெர்மனி பிரிட்டனிலிருந்து இன்னும் அதிகமான ஆயுதங்கள் வாங்குவதென உடன்பாடு ஏற்பட்டது திரு. மாக்மில்லன், பேச்சுவார்த்தைக்குப்பின் லண்டன் திரும்பினர்.

## மணி வாக்கு

'பழமை என்பதற்காக எதையும் புறக்கணிக்கக் கூடாது. புதுமை என்பதற்காக எதையும்ஏற்றுக் கொள்ளவும் கூடாது.'


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ 27 உ (11-1-62

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389


## ஒரு சிறந்த யோசனை

இலங்கையில் சர்வகட்சி மந்திரிசபையை அமைக்கவேண்டுமென்கிறார் காலிப்பிரதிநிதி தகநாயக்கா. இது ஒரு சிறந்த யோசனை. நாடு விடுதலை அடைந்து 13 வருட காலமாயினும் விரும்பத்தக்க அபிவிருத்தி ஏற்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் கட்சிப் போட்டிகள் தான். இப்போட்டி காரணமாக, வகுப்புவாதங்கள் அதிகரிக்கவும், நெருக்கடிகள் அடிக்கடி ஏற்படவும், மந்திரிசபைகள் ஸ்திரமாக வேலைசெய்ய முடியாமலும் இருக்கின்றது.

பத்தாவது தடவையாக அவசரகாலத்தையும் இப்போது நீடித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும், வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டு பொதுமக்களைச் சங்கடப்படுத்துகின்றன. இந்த நிலைமை, எந்தத்தேசாபிமானிசரும் மகிழ்ச்சியளிக்க முடியாது. வேறு கட்சி ஆட்சிக்குவந்தாலும் இந்த நிலைமை மாறுமென்று கூறுவதற்கில்லை ஆகவே கட்சி நலன்களை மறந்து சில வருடங்களுக்காவது சர்வகட்சி மந்திரிசபையை அமைப்பதுதான், நாட்டின் முன்னேற்றத்துக்கு வழியாகும் இன்றேல் இராணுவ ஆட்சி இங்கு ஏற்படவேண்டியிருக்கும்.

சர்வகட்சி மந்திரிசபையில் காலிமெம்பர் யோசனையின்படி, 14 பேரிருப்பர். ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக தொடர்ந்து இருக்கலாமென்றும், டாக்டர் என். எம் நிதிமந்திரி, செனேட்டர் எஸ். நடேசன் நீதி, எஸ். ஜே. வி. ஸ்தலஸ்பாபனம், டட்லி சபைமுதல்வர், டாக்டர் கொல்வின் தொழில், டாக்டர் விக்ரமசிங்கா சுகாதாரம், பிலிப் உணவு, எம். டி. பண்டா கல்வி, ஜே. ஆர். தபால் தகவல், ஸி. பி. டி. ஸில்வா விவசாயம், கலுகல்ல போக்குவரத்து, மைத்திரிபால உள்நாடு, கலாசார மந்திரி, ஆர். ஜி வர்த்தக மந்திரியாகவும் இருக்கலாமென்றும் அவர் கூறியிருக்கிறார். இவர்கள் எல்லாரும் திறமைசாலிகள். அன்றே நாட்டுக்கு இவ்வித சர்வ கட்சி மந்திரிசபை ஏற்பட்டு நடக்க முடியுமாயின், நாட்டுக்கு விமோசனம் பிறந்துவிடும்.

ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார்! இப்போது மந்திரிகளாகவுள்ளவர்களில் பலர் பதவி துறக்க விரும்புவரா? என்பது கடினமான கேள்விகள். பல சோதனைகளையும் சமாளித்துள்ள வர்னர்ஜெனரல் சர். ஆலிவர் இவர்களனைவருக்கும் நண்பர். கட்சிப்பற்றில்லாத நடுவர். அனுபவமும் திறமையுமிக்கவர். தேசாபிமானி. அவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, எல்லாக் கட்சித்தலைவர்களையும் அழைத்துப்பேச முயன்றால், ஒரு தேசிய மந்திரிசபை ஏற்படுவதற்கும் வழிபிறக்கலாம். இலங்கையில் ஜனநாயகம் காப்பாற்றப்பட்டு, மக்கள் அமைதியாக முன்னேறவேண்டுமாயின் திறமையும் அனுபவமும் மிக்க தலைவர்கள் தங்கள் பழைய வேற்றுமைகளை ஒதுக்கிவைத்து ஒத்துழைக்க முன்வரவேண்டியது இப்போது மிக அவசர முக்கிய அவசியமாகும்.

தேசிய கல்விக் கமிஷன் சிபார்சு

# 'சகல மாணவர்களுக்கும் சிங்களம் கட்டாய பாடமாக்கப்படல் வேண்டும்'

## நடேசனும் பேரின்பநாயகமும் தெரிவித்துள்ள ஆட்சேபம் வேறு பல அங்கத்தவர்களும் மறுப்பு

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் கனிஷ்ட, சிரேஷ்ட வகுப்புக்கள் யாவற்றிலும் பயிலும் மாணவர்கள் சிங்களத்தை கட்டாயபாடமாகப்பயிலவேண்டுமென தேசிய கல்விக்கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது.

சிங்களம் அவ்வாறு கட்டாய பாடமாக்கப்படுவதைத் தாம் ஏற்றுக்கொள்ளவில்லையென தேசியகல்விக்கமிஷனின் தமிழ் அங்கத்தவர்களான திரு சு. நடேசனும், திரு. ஹண்டி பேரின்பநாயகமும் தமது கருத்தை விளக்கமாகத் தெரிவித்துள்ளனர். சிங்களம் கட்டாய பாடமாக்கப்படவேண்டுமென்பதை ஆட்சேபித்து திரு நடேசனும், திரு. பேரின்பநாயகமும் மாணவரது தாய்மொழியல்லாத வேறு எந்தமொழியும் கட்டாய பாடமாக்கப்படுதல் விரும்பத்தகாதது என்பதை வலியுறுத்தியிருக்கின்றனர். அத்துடன் 5-ம் வகுப்பு வரைக்கும் மாணவர்களுக்குத் தாய்மொழியல்லாத வேறு மொழிகள் பயிற்றப்படக்கூடாதெனவும் அதன் பின்னரும் மாணவரது விருப்பத்தையொட்டியே வேறுமொழிகள் அவர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டுமெனவும் இவ்விருவரும் சிபார்சு செய்துள்ளனர்.

'சிங்களம் மட்டும்' சட்டத்தைப் பூரணத்துவம் பெற்ற ஓர் சட்டமாக இன்னும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் எல்லாக்கட்சிகளைச் சேர்ந்த தமிழர்களாலும் ஏகமனதாக எதிர்க்கப்படும் இச்சட்டத்தில் தங்களுக்குச் சாதகமான மாற்றங்கள் செய்யப்படலாம் எனத் தமிழ்மக்கள்யாவரும் இன்னும் எதிர்பார்க்கின்றனர் என்பதையும் திருவாளர்கள் நடேசனும், பேரின்பநாயகமும்சுட்டிக் காட்டியுள்ளனர்.

மிகவும் சமீபகாலத்தில் எதிர்பாராத விதமாகத் தோன்றியுள்ள 'அரசாங்க மொழி'க் கொள்கையின் சட்டபூர்வமான அம்சத்தை மாத்திரம் நோக்குவதால், நாட்டின் எதிர்காலம் சுபிட்சத்தைப் பாழடித்துவிடக் கூடாதென அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். அரசாங்கத்தின் 'அரசகரும மொழி'க் கொள்கையால் நாட்டில் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பை வளர்க்கும் முறையில் தேசிய கல்விக்கமிஷனது சிபார்சுகள் எவையும் அமையக் கூடாது என்பதும் இவ்விரு அங்கத்தவர்களாலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் இளம் வயதில்எத்தச் சமூகத்தைச்சேர்ந்த மாணவர்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்பிப்பது அவர்களது உள வளர்ச்சியைத் தடைசெய்து உள ஒருமைப்பாட்டைக் கூறுபடுத்தும் எனத் தாம் அபிப்பிராயப்படுவதாக இவர்கள் கூறியுள்ளனர். ஆகவே கட்டாய மொழியாக சிங்களத்தைக் கற்பிப்பதன் மூலம் தமிழ், முஸ்லிம் மாணவர்களை இளம் வயதிலேயே மூன்று மொழிகளைப் —தமிழ், சிங்களம், ஆங்கிலம்— பயிலச் செய்வது கல்விக் கொள்கைக் கண்ணோட்டத்தில் விரும்பத் தகாதது என்பதை திருவாளர் நடேசனும் பேரின்பநாயகமும் வலியுறுத்தியிருக்கின்றனர்.

தேசியக் கல்விக் கமிஷனின் தலைவரான பேராசிரியர் ஜே. ஈ ஜயசூரியாவும், திரு. ஆர். சீ. எல். அட்டியகலை, டாக்டர் ஏ. டபிள்யூ. எம். ஜோக்கிம், திருமதி ஏ. எப். எஸ். பேரேரா, திரு. சீ. ஈ. சிமித்ராராச்சி போன்ற அங்கத்தவர்களும் சிங்களத்தை யாவரும் படித்தற்குரிய வசதிகளளிக்கப்பட்டால் போதுமெனவும் நிர்ப்பந்தமாக யார்மீதும் எம் மொழியும் திணிக்கப்படாதெனவும் தாம் கருதுவதாகத் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு?

## ஐரோப்பிய பொதுசந்தைபற்றி விவாதிக்கும்

லண்டன், ஜன. 10

ஒட்டாவாவில் காமன்வெல்த் பிரதமர்களின் விசேஷ மகாநாடு ஒன்றுகூடி ஐரோப்பியப் பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வது பற்றி ஆலோசிக்கும் என சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

லண்டனுக்கு வெளியே காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு நடக்கவிருப்பது இதுவே முதல்தடவையாகும். ஒட்டாவாவில் இந்த மகாநாட்டைக் கூட்ட கனடா பிரதமர் திரு டீபன் பேக்கர் பெருமுயற்சி செய்ததாயும், இதர காமன்வெல்த் நாடுகளுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால் மகாநாடு கனடாவில் நடப்பது சாத்தியமே என்றும் கூறப்படுகிறது.

எல்லா மாகாணங்களிலும்

# நிரந்தர தொழில் விசாரணைச் சபைகளை நிறுவ ஏற்பாடு

## தொழிற் தகராறுகளை விரைவில் தீர்க்க இவை உதவும்

கொழும்பு, புதன்

எல்லா மாகாணங்களிலும் நிரந்தரமான தொழில் விசாரணைச் சபைகளை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் ஒழுங்குகள் செய்து வருகிறது மத்திய மாகாணத்திற்கான நிரந்தர தொழில் விசாரணைச் சபையொன்று விரைவில் கண்டியில் நிறுவப்படவிருக்கிறது. காலியிலும் இத்தகைய சபை ஒன்று சமீபத்தில் ஸ்தாபிக்கப்படுமாம்.

தற்போது கொழும்பில் கடமையாற்றும் 6 தொழில் விசாரணைச் சபைகளில்சில குறிப்பிட்டகாலங்களில் கண்டியிலும், காலியிலும் தொழில் தகராறுகளை விசாரிப்பது வழக்கமாயிருந்தது.

1959-ல் முதலில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த தொழில் விசாரணைச் சபைகள் இதுவரை 5000 க்கு மேற்பட்ட தொழில் தகராறுகளைத் தீர்த்து வைத்துள்ளன.

எஜமானர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையே ஏற்படும தகராறுகளைத் தீர்த்துவைப்பதில் காலக்கிரமத்தில் இவ்விசாரணைச் சபைகள் சாதாரண சிவில் நீதிஸ்தலங்களையும் விட உபயோகமுள்ளவையாய் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

### யாரும் ஆஜராகலாம்

கடந்த நவம்பர்வரை, தொழில் விசாரணைகளுக்கு கட்சிக்காரர்களுக்காக அப்புகாத்துமார், புரக்டர்மார் அல்லது தொழிற்சங்க உத்தியோகஸ்தர்கள் மட்டுமே ஆஜராகலாம் என வரையறை செய்யப்பட்டிருந்தது. ஆனால் 1961 நவம்பருக்குப் பின்னர் தொழில் விசாரணைச் சபையில் எடுத்துக் கொள்ளப்படும் தகராறுகளில் சம்பந்தப்பட்ட கட்சிக்காரருக்காக அவரது பிரதிநிதியெவரும் ஆஜராக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

## மாலுமிகள் அறையில் ரூ. 1 லட்சம்பெறுமான கடிகாரங்கள்

பம்பாய், ஜன. 10

ரூ 1 லட்சம் பெறுமதியுள்ள 560 கைக்கடிகாரங்கள் பம்பாய் துறைமுகத்தில் ஒரு கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்டன. அந்தக் கைக்கடிகாரங்கள் யாருடையது என்பது தெரியவில்லை. ஆனால், மாலுமிகள் அக்கப்பலில் இல்லாதபோது அவர்கள் தங்கும் இடத்திலிருந்து அவை கைப்பற்றப்பட்டனவாம்.

## 12 "சட்டவிரோத குடியேற்றகாரர்" கைதாயினர்

மன்னார், புதன்

மன்னார் தாழ்வுபடு கடற்கரையில் இறங்கியதாகக் கூறப்படும் 24 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களில் 9 பேரை ராணுவம் கைதுசெய்ததாய் அடுவிக்கப்படுகிறது அரிப்புக்கரையில் மற்றும் 3 சட்டவிரேதக் குடியேற்றக்காரர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## 'கோவாஜி'

பாட்னா, ஜன 10

இந்திய பாதுகாப்பு மந்திரி திரு.கிருஷ்ணமேனனுக்கு பாட்னாவைச்சேர்ந்த ஒரு தீவிர காங்கிரஸ்காரர் 'கோவாஜி' என்னும் கௌரவப்பட்டத்தை வழங்கியுள்ளார் போர்ச்சுக்கீஸியர் ஆதிக்கத்திலிருந்து கோவாவைவிடுவித்த பெருமை முக்கியமாக திரு. கிருஷ்ணமேனனையே சேரும். ஆகவே அவருக்கு 'கோவாஜி' என்னும் கௌரவப்பட்டம் மிகவும் பொருத்தமானது என்று மேற்கூறிய காங்கிரஸகாரர் கருதுவதாகத் தெரிகிறது.

## ஐயாறன் எழுதுவது

பல நாட்களுக்குப்பின் பண்ணைப் பாலத்துக்கு நண்பருடன் சென்றேன். இயற்கை அழகு கண்ணைக் கவர்ந்தது. சுகமான காற்று.

மாலைக் கதிரவன் தன் செங்கதிர்களை எங்கும் பரப்பி, எல்லாம் பொன்மயமாக்கினுன். அன்று அவன் வேலையும் முடிந்தது போலும். கடலுக்கப்பால் எங்கோ சட்டென்று சென்று பேசாமல் மறைத்துவிட்டான்.

ஒரு விநாடி பிசகாமல் வருகிறுன், போகிறுன். ஓய்வே இல்லை; ஓவர் டயமும் கேட்பதில்லை.

"கதிரவனே! நீ என்ன நெருப்புப் பிழம்பா? அல்லது சோதிஸ்வருபனு? எவ்வளவு காலமாக இப்படி வேலை செய்கிறுய்! ஏன்? இன்னும் எவ்வளவு காலம் இந்த வேலை? எல்லாம் யாருடைய கட்டளை? நீர் எப்போதாவது 'ஸ்டிரைக்' செய்வதுண்டா? உனக்கு ஊதியமேது முண்டா?" என்று ஏதேதோ கேட்கவேண்டும் போல் தோன்றியது. ஆனல் எங்கோ வெகு தூரத்திலிருக்கும் அவனுக்கு இதெல்லாம் எங்கே கேட்கப்போகிறது? கேட்டாலும் பதில் சொல்லப் போகிறுஞ? பனியும் வந்தது. வீடும் திரும்பினேன்.

* * *

காலையிலே கோவில் பக்கம் சென்றேன். வழியில் ஒரு நந்தவனம்; அதில் ரோஜாச் செடி. அழகான இரு புஷ்பங்கள் பூத்து, பெருமையுடனே நறுமணம் வீசி கதிரவனை வரவேற்க நன்றியுடன் காத்திருந்தன.

புலர்வதற்குக் காத்திருந்த இரு வண்ணாத்திப் பூச்சிகளும் புருஷனும் மனைவிபோலும். நேரே ரோஜா மலரின் நறுமண அழைப்பை ஏற்று ஒயிலாகப் பறந்து வந்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு புஷ்பத்தில் அமர்ந்து சுகமாகக் காலை உணவுண்டன! இந்த இனிய உணவுக்கு ரோஜா காசெதுவும் கேட்கவில்லை. யாரும் வந்து சாப்பிட்டால், அதுவே தன் பாக்கியமென்றிருந்தது!

செடியும் கொடியும் எவ்வளவு தியாக வாழ்வு வாழ்கின்றன! அந்த வண்ணாத்திப் பூச்சிக்குத்தான் எவ்வளவு இன்பம்! அவற்றிடம் பாடம் கற்று அப்படி நாமும் வாழ முடியாதா?

* * *

அதிகாலையிலே குளிரிலே எழுந்து தமிழ்த் தாய்மார் புள்ளிகள் வைத்து வண்ணக் கோலமிட்டு, பூ வைத்து தெருவை அழகு செய்துகொண்டிருந்தனர். மார்கழி எல்லாம் இப்படிச் செய்கிறுர்கள். எவ்வளவு வித விதமான கோலங்கள்! எத்தனை கலை உணர்ச்சி!

ஏன் இவ்வளவும்! இன்னும் எத்தனை நாள்? எல்லாம் தை மாதத்திலே கதிரவனை வரவேற்று, பொங்கல் படைத்து நன்றி தெரிவிக்கத்தான். அவனின்றி உணவேது? உயிரேது? தானியங்களை எல்லாம் அள்ளி அள்ளி நமக்குக் கொட்டுகின்றுன். ஒரு நெல்லைப் போட்டால், ஆயிரமாகக் கொடுக்கின்றுன்! கணக்கு ஏதுமுண்டோ! ஞாயிறே நீ வாழ்க! இப்படி வாழ்த்துவதைத் தவிர உனக்கு நான் என்ன கைமாறு செய்ய முடியும்? நான் வாழ்த்தாவிட்டாலும் நீ கவலைப் படப்போவதில்லை. என்றுலும் என் ஆறுதலுக்காக வாழ்த்துகின்றேன்! கூடாதா?

* * *

கோவிலுக்குச் சென்றேன். குருக்கள் சிப்பந்திகள் எல்லாரும் விளக்குகள் முதல் விக்கிரகங்கள் வரை எல்லாம் துப்புரவு செய்கிறுர்கள். அழுக்கெல்லாம் நீக்கி, சுத்தப்படுத்துகிறுர்கள். அழுக்கெல்லாம் அகறறியபின் எவ்வளவு புதுமை, எவ்வளவு அழகு!

(5ம பக்கம் பார்க்க)

# சிறைக்குச் செல்வோர் தமது வேலையை இழக்க வேண்டியதில்லை!

## அரசாங்கம் ஆராய்ந்துவரும் புதிய திட்டம்

கொழும்பு, புதன்
சிறுகால சிறைத தண்டனைக் கனுப்பப்படும் குற்றவாளிகளை சிறையிலிரு து தினந்தோறும் அவர்களது வேலை ஸ்தலங்களுக்குச் சென்றுவர அனுமதிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசித்துவருகிறது.

சிறைக்குச் செல்வது காரணமாக தமது நிரந்தர வேலையை இழக்க நேரிடுவதால் சிலர் மீண்டும் மீண்டும் தவருன வழியில் செல்ல வழியேற்படுகின்றதெனவும் இப்புதிய ஒழுங்கின் மூலம் இது நிவர்த்திக்கப்படுமெனவும் உள்நாட்டமைச்சு கருதுகிறது.

உள்நாட்டமைச்சிஞல் பிரேரிக்கப்பட்டுள்ள இத் திட்டம் அட்டோர்னிஜெனரலால் அங்கீகரிக்கப்பட்டபின்ன அரசாங்க அங்கீகாரத்திற்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதாயின் சிறைச்சாலைகள் பற்றியுள்ள தற்போதைய சட்டம் மாற்றப்பட வேண்டுமெனத் தெரியவருகிறது.

—

## ஆண்டுவிழா

ஊர்காவற்றுறை, புதன்
சரவணை – சனசமூகநிலையத்தின் 15-வது ஆண்டு விழா எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறும். இவ்விழாவில் இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

—

## பலம் பொருந்திய....

(2ம் பக்கத் தொடர்ச்சி)
ரிசர்வ் தொகுதியில் நிற்கும்படியாக வோட்டாளர்கள் என்னைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிக்கொள்கிறேன்" என்று திரு. மாணிக்கம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

அந்தியூர் ரிசர்வ் தொகுதிக்குக் காங்கிரஸ் அபேட்சகராக திரு ஜி. டி. பெருமாள் ராஜு என்பவர் போட்டியிடுகிறார்.

—

## மாங்கனி உணவுகள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
4. போத்தல் (கிடைச்சியுடன்)
5. வனிலா
6. பொட்டாசியம் மெற்ற பை சல் பை (Potasium Meta bi Sulphite)

**செய்யும் முறை**

நன்ருக முற்றிப் பழுத்த நல்ல இன மாம்பழமாகத் தெரிந்தெடுத்துக் கழுவித் தோலைச் சீவிய பின்னர் சிறு சிறு துண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்துள் போடவும். பின்னர் ஒன்றரைப் போத்தல் தண்ணீர் விட்டுக் கடைந்து 20 நிமிஷங்கள் வரை அடுப்பில் கொதிக்க வைக்கவும். சிறிது ஆறிய பின்னர் சுத்தமான துணியில் வடித்து 1 போத்தல் சாற்றுக்கு 1 இருத்தல் 2 அவுன்ஸ் சீனியும் எலுமிச்சம்புளியும் விட்டுக் கரைத்துத் திரும்பவும் ஒரு முறை வடித்தெடுக்கவேண்டும். பின்பு அச்சாற்றைச் சுத்தம் செய்த போத்தலில் ஊற்றவும். அரைக்கால் தேக்கரண்டி பொட்டாசியம் மெற்ற பை சல் பைற்றை ஆறிய சுடுநீரில் கரைத்துப் போத்தலுக்குள் இருக்கும் சாற்றுக்குமேல் ஊற்றி இறுக்கமான கிடைச்சியினல் அடைத்துக் காற்று உட்செல்லா வண்ணம் எக்கிரியினல் அடைக்கவேண்டும்

## "வைத்தியவசதி செய்து தருக"

### கொக்கிளாய் மக்கள் முறையீடு

முள்ளியவளை, புதன்
"கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கரைநாட்டுச்கேணி ஆகிய கிராமங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்டமக்கள் வாழ்கிறார்கள். மீன்பிடிக்கும் 7 மாதங்களில் 2000 மக்கள் வெளியிடங்களிலிருந்து வந்து தங்குவார்கள். இங்குடிஸ்பென்சரி மட்டுமே உண்டு. இக்கிராமங்களில், கடந்த பல வருடங்களாகச் சுகாதார மருத்துவமாதும் இல்லை. இக்குறைகளை நீக்கித்தரும்படிகேட்டுக்கொள்கிறோம்."

கொக்கிளாய்க் கிராமத்தில், வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரத்துக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது மேற்கண்டவாறு கூறும் கிராம மக்களின் குறைபாடுகளடங்கிய மகஜர் ஒன்று கொடுக்கப்பட்டது.

இக் குறைபாடுகளையிட்டுத்தான் உடனடியாகச் சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொள்வதாக, வவனியாப் பிரதிநிதி வாக்குறுதியளித்தார்.

## இரவு விடுதிக்கு ஆட்சேபம்

ஹிண்டகல, புதன்
பௌத்த பாடசாலையொன்றுக்கும், கண்டிமல்வத்தை மகாவிகாரைக்கமருகில் இரவு களியாட்டவிடுதி ஒன்று நடைபெற்றுவருவதைஆட்சேபித்து, பௌத்த சங்கங்களும் பெற்றோர் ஆசிரிய சங்கங்களின் அங்கத்தவர்களும் மாபெரும் எதிர்ப்பொன்றைக் காட்டத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கு ஆதரவு கொடுக்குமுகமாக உடறட்ட சான்ஸ் குறுதியா மண்டலம் பின்வரும் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

"பௌத்த சூழ்நிலைகொண்ட ஒரு இடத்தில், இரவு விடுதியை நடாத்த கண்டி மாநகர சபை அனுமதி கொடுத்திருப்பதை நாங்கள் பலமாக எதிர்க்கின்றோம்."

உடறட்ட சான்ஸ்குறுதியா மண்டலாயாவின் கூட்டமொன்றுக்கு தலைமை வகித்த திரு. பி. சி. பி. ஸ்ரீயாநந்தா பேசுகையில், கண்டியிலுள்ள ஒரேயொரு பௌத்த பெண்கள் பாடசாலைக்கும், அதன் விடுதிக்கும் அருகில் இந்த 'நைட் கிளப்' நடைபெறுவது ஆண்களையும், பெண்களையும் அங்கு வரத்தூண்டுவதோடு மட்டுமன்றி, கண்டி மாநகரத்துக்கே பெரிய இழுக்காக வந்துசேரும் என்ருர்.

—

லண்டன், ஜன 10
தனது தந்தை, பம்பாய் ஹைகோர்ட் நீதிபதி எனக் கூறிக்கொண்டு திரிந்த 27 வயதுள்ள இளைஞர் காவாண்டேக்கு ஏமாற்றுமோசம்செய்ததாக ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# நேபாளி காங்கிரஸ் ஆயுதக் கிளர்ச்சி

## விரைவில் மும்முரமாகுமாம்

கல்கத்தா, ஜன 10
நேபாள மன்னரின் கொடுங்கோன்மையை எதிர்த்து அங்கு பலவிடங்களில் ஆயுதத்துடன் மக்கள் கிளர்ச்சிசெய்வதாக நேபாள காங்கிரஸ் தலைவர் ஜெனரல் சுபர்ண இங்கு நிருபர்கள் கூட்டத்தில் கூறினர். கூடிய விரைவில் மக்களின் கிளர்ச்சி மிகவும் மும்முரமாக இருக்குமென்ருர்.

நேபாளமக்கள் பல பொலிஸ நிலையங்களைப் பிடித்துள்ளனர். ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றினர். எல்லா ஜில்லாக்களிலும் கட்டுப்பாடான எதிர்ப்பு இயக்கம் நடத்துகிருர்கள். இத்தகைய நிலையங்களை அரசாங்கம் திரும்பப் பிடித்துக்கொண்டதில் அர்த்தமொன்றுமில்லை. ஏனெனில் ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொள்வதென்ற முக்கியமான நோக்கம் ஏற்கெனவே நிறைவேறிவிட்டது என்று ஜெனரல் சுபர்ண சம்ஷிர் கூறினர்.

நேபாள காங்கிரஸை தேசத்துரோகிகள் என்று சமீபத்தில் மன்னர் மகேந்திரர் கூறியதையும் பழைய ராணுக்களின் கிளர்ச்சி என்று வர்ணித்ததையும் ஜெனரல் சுபர்ண குறிப்பிட்டார். மக்களின் இயக்கத்தை இவ்வாறு கருதுவது மன்னரின் தீர்க்க தரிசனமின்மையைக் காட்டுகிறது என்று சுபர்ண கூறினர்.

மன்னர் தமது பிரசாரத்தில் இந்தியாவின் நற்பெயருக்கு இழுக்கு தேடும் வகையில் பேசியதைக் கண்டித்தார். மன்னர் நிதானமிழந்துவிட்டதையே இது காட்டுகிறது என்று சுபர்ண கூறினர்.

மன்னரின் எதேச்சாதிகாரத்தில்மக்களுக்குஅலுப்பு த்தோன்றிவிட்டதென்றும் நேபாளத்தில் எதுவும் நேருமென்றும் கூறினர்.

'நேபாள காங்கிரஸ் ஜனநாயகம், சுதந்திரத்துக்காகப் போர் புரிகிறது, இது நேபாள மக்களுக்கான யுத்தம். வெற்றி கிடைக்கும்வரை போர் நடக்கும்" என்று சுபர்ண கூறினர். வெளிநாட்டிலிருந்து புரட்சி இயக்கப்படுவதாகக்கூறுவதை மறுத்தார். நேபாள கம்யூனிஸ்டுகள் மன்னரை ஆதரிப்பது வருந்தத்தக்கது என்ருர்.

—

## காங்கிரஸிலிருந்து பஜாஜ் ராஜினமா

பம்பாய், ஜன. 10
அ. இ. கா. க. மத்திய இளைஞர் ஆலோசக போர்டு மம்பரும், இளைஞர் காங்கிரசுடன் தொடர்புள்ளவருமான திரு. ராம கிருஷ்ண பஜாஜ் காங்கிரஸிலிருந்து. ராஜினமாச் செய்துவிட்டார்

காங்கிரஸிலிருந்தும், இளைஞர் காங்கிரஸில் வகித்து வந்த பதவிகளிலிருந்தும் ராஜினமாச்செய்து அக்கிராசனருக்குத் தாம் எழுதியுள்ள கடிதத்தை அவர் வெளியிட்டார்.

"தேர்தலின்போது திரு. வி. கே. கிருஷ்ணமேனனை எதிர்க்க தமக்குப் பூரண சுதந்திரம் இருக்கவேண்டும்" என்று தாம் கருதியதாலேயே இந்த நடவடிக்கையைத் தாம் மேற்கொண்டிருப்பதாக திரு. பஜாஜ் தமது கடிதத்தில் கூறுகிருர்.

வட பம்பாய் லோக சபைத் தொகுதியில் திரு. மேனன் காங்கிரஸ் அபேட்சகராகவும் அவரை எதிர்த்து ஆசாரிய கிருபளானி போட்டியிடுவது தெரிந்ததே.

திரு. கிருஷ்ணமேனனை மீண்டும் காங்கிரஸ அபேட்சகராக நிறுத்துவதென்ற முடிவு குறித்து திரு. பஜாஜ் வருத்தம் தெரிவித்திருக்கிருர். திரு. மேனன் கம்யூனிஸ்ட் ஆதரவாளர் என்று தாம் திடமாகக் கருதுவதாகவும், அவர் அரசாங்கத்தில் தொடர்ந்து இருப்பது குறிப்பாகக் கம்யூனிஸ்ட் சீனவிடமிருந்து நாட்டின் பந்தோபஸ்துக்கு இடைவிடாமல் மிரட்டல் இருக்கும்போது, நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல என்றும் அவர் கருதுகிருர்.

திரு. மேனனை அபேட்சகராக நிறுத்துவதைத் தம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்றும் அவர் கூறுகிருர்.

## 'தொழிற்கல்வி பெருக வேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்
"தொழிற்கல்வியைப் பெருமளவில் புகுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்த்து வைப்பதே தேசிய கல்வித்திட்டத்தின் குறிக்கோளாக இருக்க வேண்டும். இல்லையேல் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் சக்தியை நமது நாடு பயன்படுத்த முடியாது போய்விடும்"

இவ்வாறு கோப்பாய் சூரியோதைய சனசமூக நிலையத்தின் 18-வது வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. கே. இராசரத்தினம் குறிப்பிட்டார்.

காரியதரிசி, தனதிகாரி ஆகியோரால் சென்ற வருட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டன.

புதுவருட உத்திகயாகத்தர் தெரிவில் திருவாளர்கள் க. இராசரத்தினம், நா. அருளம்பலம், அ. உலகநாதன், க. நாகம்பிள்ளை ஆகியோர்கள் போஷகர்களாகவும் திரு. க. நா. கந்தசாமி தலைவராகவும் திரு. க. இ. அன்னலிங்கம் உபதலைவராகவும், திரு. க. இ. தர்மலிங்கம் காரியதரிசியாகவும் திரு க. வ. தியாகராசா தனதிகாரியாகமை தெரிவு செய்யப்பட்டனர்.

—

## "கந்தையா வீதி"

உடுப்பிட்டி, புதன்
காலஞ்சென்ற பருத்தித்துறை எம். பி. யும் கரவெட்டியிற் பிறந்தவருமான திரு. பொன்னம்பலம் கந்தையாவின் ஞாபகார்த்தமாக, கரவெட்டி பழைய தபாற்கந்தோர் வீதிக்குக் "கந்தையா வீதி" எனப் பெயரிட வேண்டுமென்ற தீர்மானம் ஒன்று கட்டைவேலிக் கிராமசபையின் அடுத்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்

—

## திரு. தல்கொடபிட்டியா

—

கொழும்பு, புதன்
பாராளுமன்ற லஞ்சக்கமிஷன் தலைவராகவும், அனுராதபுரத்தில் அசைஸ் கமிஷனராகக் கடமையாற்றியவருமான திரு.வால்டர் தல்கொடபிட்டியா நீதி சேவையிலிருந்து ஒய்வுபெற்றிருக்கிருர்.

—

## ஐயாறன்

(4-ம் பக்கத்தொடர்ச்சி)
நாமும் நம் உடல் அழுக்கை மட்டுமன்றி மன அழுக்கையும் நீக்கி, நெருங்கிவருகிற தைமாதப்பிறப்பன்று கதிரவனை நன்றியுடன் வரவேற்கத் தயார் செய்துகொள்ளவேண்டுமென்று உணர்ந்தேன். உடல் அழுக்கைப்போக்கலாம் சோப்புகளால். ஆனல் இந்த மனம் வெளுக்க வழியில்லையே எங்கள் முத்துமாரி அம்மா எங்கள் முத்துமாரி!

# துறைமுகத்தில் தனியார் ஆட்களுக்கு அனுமதி

## சரக்குகளை அகற்ற புதியஒழுங்கு

கொழும்பு, புதன்
இறக்குமதியாளர்கள் கொழும்புத் துறை முகத்தில் தமக்கென வந்துள்ள சரக்குகளை அகற்றுவதற்கு தனிப்பட்ட முறையில் தாமே தொழிலாளர்களை அமர்த்திக்கொள்ளலாம்.

தற்போதைய வேலைநிறுத்த நிலைமையில் துறைமுகத்திலிருந்து சரக்குகளை வெளியேற்றுவதற்கான இவ்வொழுங்கு பற்றி சுங்கப்பிரதம கலெக்டர் திரு. எல். டி. கஸ் பேர்ஸ் இறக்குமதியாளருக்கும் சுங்க இலாகா அதிகாரிகளுக்கும் தெரிவித்திருக்கிறார்.

தமது சரக்குகளை அகற்றுவதற்கு வேண்டிய தொழிலாளர்களைக்கொண்டு வரும் பட்சத்தில் இறக்குமதியாளர்கள் தமது சரக்குகளை அகற்ற அனுமதிக்கப் படுவரென்றும் இவ்வூழியர்களுக்குத் தேவையான பாஸ்களை துறைமுகக் கமிஷன் வழங்குமெனவும் திரு. கஸ்பேர்ஸ் அறிவித்திருக்கின்ருர்.

—

## உதைபந்தாட்டம்

வவனியா, புதன்
வவனியாவில் ஒருமாதகாலமாக நடைபெற்றுக்கொண்டிருந்த உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதிக்கட்டமான சம்பியன் வெற்றிக்கிண்ணத்தைப்பெறும் ஆட்டம் வவனியா முற்றவெளிமைதானத்தில் நடைபெற்றது. மொத்தம் 7 கோஷ்டிகள் பங்குபற்றிய இவ்வாட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற வவனியா ஒலிம்பிக் கோஷ்டியும் வவனியா ஐக்கியவிளையாட்டுக்கழகக் கோஷ்டியும் பங்குபற்றின. இறுதியில் ஐக்கிய விளையாட்டுக் கழகக் கோஷ்டி 2-1 கோலால் வெற்றியீட்டியது.

## புனிதத் தடங்கல்!

வாலெட்டா, ஜன. 10
மால்டா தொழிற் கட்சி பொதுக் கூட்டத்தின்போது அருகிலிருந்த கத்தோலிக்க மாதா கோவில் மணிகள் தொடர்ந்து அடித்துக்கொண்டேயிருந்ததால், பேச்சாளர்கள் பேசுவது காதில்விழவே இல்லை. இக்கட்சி ஆதரவாளர் சிலர் கோவிலுக்குள் புகமுயன்றனர். அவர்களைப் பொலிசார் கைது செய்தனர்.

மால்டா தொழிலாளர் கட்சிக்கும், ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கும் பகை என்று சொல்லப்படுகிறது. ஞாயிறன்று, தொழிற் கட்சி கூட்டத்தின் போது மாதா கோவிலில் ஏதோ சடங்கு நடந்ததென்றும், அதனல் பொதுக் கூட்டம் நடக்கும் வரையில் அங்கேயும் மணி அடிக்க நேர்ந்ததென்றும் திருச்சபையாளர் தெரிவித்தனர்.

இங்கிருந்து 5 மைலில் காலு கிராமத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. தொழிற்கட்சியினர் மாதா கோவில் கதவின் மீது கற்களையும், புட்டிகளையும் வீசினர். கோவிலுக்குள் பலாத்காரமாகப் புக முயன்ற கூட்டத்தைக் கலைக்க பொலிசார் தடியடி நடத்தினர்.

- -

"எனது தந்தையைப்பற்றி சீக்கிரம் ஒரு நூல் வெளியிடலாமென இருக்கிறேன். அவர் வாழ்க்கையில் எவ்வளவு தைரியமாகச் செயலாற்றினர் என்பதுபற்றிப் பல சம்பவங்களை அதில் குறிப்பிடுவேன்" என திரு. டட்லி சேனநாயக்கா ஒரு கூட்டத்தில் கூறினர்.

# மங்கையர் உலகம்



## 'மணிப்புரி' வாங்கினல் போதுமா?

— தங்கம் —

நான் எதிர்பார்த்ததுபோல சனிக்கிழமை மாலை அடுத்த வீட்டு ராசம் வந்தாள். ஒரு கையில் எவர்சில்வர் பாத்திரம். அவளது மறு கையை அவளது மூன்றுவயதுச் சிறுமி பிடித்திருந்தாள். பாத்திரத்தை உயரமாக ஏந்தியபடி, அவள் ஒய்யாரமாக நடந்துவந்தாள். என்னைக் கண்டதும் "ஏன் தங்கம் நீ என்னை எதிர்பார்த்திருப்பாய்தானே. நாளை ஞாயிற்றுக்கிழமை. உளுந்தும் கையுமாக இன்றுமாலை ராசம் வருவாள் என்று நினைவாக இருந்திருப்பாயே?" என்ருள்.

ராசம் வீட்டு ஆட்டுக்கல் தேய்திருந்தது. பொழுதுபோக்காக என்னுடன் பேசிக்கொண்டே உளுந்தரைத்து விடலாம் என்று பிரதி சனிக்கிழமை மாலையும் ராசம் என் வீட்டுக்கு வந்து விடுவாள்.

வீண் வம்பு பேசுவது ராசத்தின் குணமல்ல. அவளுக்கு அது கட்டோடு பிடிக்காது. அவள் பேசுவது அநேகமாக உபயோகமுடையதாகத் தானிருக்கும். வீட்டை எவ்வாறு அழகுபடுத்தலாம், குழந்தைக்கு எவ்வாறு சட்டை தைக்கலாம், எந்தவகை உணவை எவ்வாறு தயார் செய்யலாம் என்று ஏதாவது பயனுள்ள பொருள்பற்றித்தான் பேசிக்கொள்வாள். எனக்கும் அவளுடன் பேசுவதில் ஒருதிருப்தி. எனக்குத் தெரியாத பல விஷயங்களை 'அப்படிச் செய்யலாமே தங்கம்' "இப்படிச் செய்தால் நல்லாய் இருக்கும்" என்று புத்தியும்கூறிவருவாள்.

எனக்கென்னவோ விலை மிக்க ஸாரிகள் வாங்கி அடுக்கி வைப்பதில் ஒரு வீண் பிரியம். ஒருவகையில் அசம்பாவிதம் மிக்க பழக்கம் என்று உணர்ந்திருந்தபோதும் இப்பழக்கம் என்னைவிட்டு அகலவில்லை.

ராசம் உழுந்தரைத்துக் கொண்டிருந்தாள். நானும் போய் பக்கத்தில் குந்தி விட்டேன். அவளின் குட்டிப் பிரசங்கங்களில் ஒன்று அன்றும் என் காதில் விழக் காத்திருந்தது.

"ராசம், ராசம், ஒரு நல்ல சமாச்சாரம். தைப்பொங்கலையிட்டு எனக்கு ஒரு புதிய மணிப்புரி ஸாரி காத்திருக்கிறது. நல்லவிலையில் எனக்கு ஒரு மணிப்புரி ஸாரி வாங்கிக் கொடுப்பதாக என் கணவர் சொன்னர். இந்த ஸாரிப் 'பைத்தியத்'தை என்னிடம் வளர்த்ததற்கு என் கணவர் தான் ஒருவகையில் காரணம்! ஏன் தங்கம், தைப்பொங்கலுக்கு உனக்கும்தானே புது ஸாரி கிடைக்கும். மணிப்புரி ஸாரி கிடைக்கும். மணிப்புரி வாங்குவதா உத்தேசம்?" என்றேன்.

ராசம் சிரித்தாள். "இதோ கேள் தங்கம்! எனக்கும் மணிப்புரி ஸாரி விருப்பம்தான். பெண்கள் எல்லோருக்கும்தான் புதுப்புது ஸாரி—அதுவும் விலையுயர்ந்த ஸாரிகள் வாங்கிக் கட்டிக் கொள்வதற்கு விருப்பம். தமது மனைவியரை அழகு பார்க்க விரும்பும் கணவன்மாரும் பெண்களிடையே இந்தப் பழக்கத்தை வளர்த்துள்ளதற்குக் காரணமாவர். வீட்டுச் செலவுகளுக்குப் போதிய பணமில்லாவிட்டால் கூடச் சில கணவன்மார், மனைவிக்கு மணிப்புரி வாங்குவதை முக்கியமாகக் கருதுவர்.

உனக்கென்ன தங்கம், ஒரு குறைவுமில்லை. ஒரு மணிப்புரியல்ல ஒன்பது மணிப்புரி வாங்கவும் உன் கணவரிடம் பணமிருக்கிறதே. நீ தாராளமாய் வாங்கிக் கட்டிக் கொள்ளலாம். எல்லோரும் அப்படிச் செய்யமுடியுமா? இதோ தங்கம், இன்று பல பெண்களிடையே காணப்படும் ஒரு குறையை நீ சொல்லு பார்ப்போம் என்று என்னிடம் கேட்டாள் ராசம். "என்ன ராசம், ஏதோ நீயே குறை கண்டு பிடிச்சிருய். நீயே சொல் கேட்போம்" என்றேன்.

"உடை என்ருல் மணிப்புரி ஸாரியும் ஏனைய ஸாரிகளும் தான் உடையல்ல. பல பெண்கள் இதை உணருவதில்லை. பெட்டிகள் நிறையவும் அலுமாரி நிறையவும் ஸாரிகளை வாங்கி அடுக்கி வைத்தால் மட்டும் போதாது. வீட்டு உடுப்புக்கள், படுக்கை விரிப்புக்கள், தளபாட அலங்கரிப்புக்கள், விரிப்புக்கள் ஆகியவற்றை எவ்வளவுக்கு அதிகமாக வைத்திருக்கிருேமோ அவ்வளவுக்கு வீட்டில் சௌகரியமாக இருக்கலாம். இவையே வீட்டை அலங்கரிக்கவும் உதவுவன. பிள்ளைகளுக்கான தலையணைகள் படுக்கைவிரிப்புக்கள், துவாய்கள், ஏனைய ஜவுளித் தேவைகள் பற்றிப் பெண்களே கவனம் செலுத்த வேண்டும். இதைப் பல பெண்கள் உணரத் தவறிவிடுகிருர்கள் இல்லையா, தங்கம்?" ராசம் கூறியதில் அதிகம் உண்மையிருந்ததைக் கண்டேன். அன்ெருரு நாள் நானும் என் கணவரும் எனது சிநேகிதைவிட்டில் தங்க வேண்டி நேரிட்டது. அவர்களது படுக்கையில் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. என் கணவரும் தூங்கவில்லை. என்று தான் கூறினர். படுக்கைகள் படு மோசம். ஆனல் சிநேகிதையின் அலுமாரியில் மணிப்புரி ஸாரிகள் அடுக்கியிருந்தன.

### பண்பட்ட சமூகம்

பெண்கள் துணையின்றித் தெருவிலும் மற்ற இடங்களிலும் பயமில்லாமல் செல்லும் நிலைமை ஏற்பட்டு வந்தால்தான் அந்தச் சமூகம் பண்பட்ட சாதியாக மதிக்கப்படும். உயர் நிலை நாகரிகத்திற்கு இதுவே அடையாளம். —ராஜாஜி


தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு

**விசேஷ இறக்குமதி**

- ஹான்ட்லூம்ஸ் சேலைகள்
- ஹான்ட்லூம்ஸ் படுக்கை விரிப்புகள்
- (f)பெதறற் பருத்திச் சேலைகள்

முதல் முதலாக இலங்கைக்கு வரவழைக்கப்பட்டவை

இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

உடனே உங்கள் தெரிவுகளைத் தெரிந்தெடுங்கள்

**டயரும்ஸ்**

மெயின் வீதி, யாழ்ப்பாணம்.


அன்புள்ள மாலதிக்கு

## நாகரீகப் போர்வையில்...(3)

உனது கடிதம் கிடைத்தது. பெண்களில் சிலர் புகைப் பிடிப்பது பற்றி ருசிகரமான பல விஷயங்களை எழுதியிருக்கிருய். அன்றைய உனது கடிதம் என்னைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. பண்பாடும், பெண்ணுள்ளமும், எதையும் சிந்தித்து பின் செயலாற்றும் திறமையும் கைவரப் பெற்றவள் நீ என்பது நம்மிற் பலருக்கும் தெரிந்ததுதான். ஆனல், மற்றவர்களின் சிறு தவறுதல்களையும் எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிருய் என்பதையறியும்போது மகிழ்ச்சியடைகிறேன்.

நம்மிற் பலரும் அடிக்கடி செய்யும் தவறுகளையெல்லாம் நாம் நல்ல படிப்பினைகளாகக் கொண்டு திருந்திய வாழ்வை திறம்பட நடத்துவது என்பது சிறந்த ஒரு கலையாகும். இந்த வாழ்க்கை நெறியை நம்மிற் பலரும் கைக்கொள்வதாகத் தெரியவல்லை. போனல் போகிற பக்கம் போகிற செம்மறியாடுகளாகவே இன்னமும் மனித குலத்தின் பெரும்பகுதி இருக்கிறது. இந்த மந்தைப் போக்கு மானிடவர்க்கத்திலிருந்து முற்ருக மறைய வேண்டும். சிந்தித்து செயலாற்றும் திறன் ஏதோ இருக்கிறதுதான்! ஆனல் அதை உரிய காலத்தில் வெளிக்கொணர்ந்து செயலாற்றத் தவறிவிடும் போது நாம் உண்மையிலேயே மந்தைகளாக மாறிவிடுகிருேமல்லவா? இன்றைய இந்தப் போக்குத்தான் நம்மிற் பலரது கண்களையும் மறைத்திருக்கிறது.

அன்று நானும் உனது சிநேகிதி வசந்தியும் எங்கள் இளைப்பாறிய ஆசிரியை புனிதவதியாரைச் சந்திக்கச் சென்றிருந்தோம். எழுபது வயதைத் தாண்டிவிட்ட அம்மையார் தம் பெயருக்கேற்ப வாழ்ந்து காட்டிய வனிதையர் திலகமல்லவா? இன்னமும் அவரது முகப் பொலிவு மாறவேயில்லை! இது ஒழுக்கத்தின் பிரதிபலிப்பு என்பதை நீ நன்கு அறிந்திருப்பாய். இந்தப் பிரயாணத்தின் போது மாறிவரும் பயங்கர உலகத்தின் உருவமொன்றை நிதர்ச்சனமாகக் கண்டோம். நகரப்புற வீதியில் நடமாடும் இந்தப் பயங்கரப் பிறவி யார் என்பதையறிவதில் நீ துடியாய்த் துடிப்பாய். இது பெண்மை உருவில் வீதிவலம் வந்தது என்பதை எழுத எனது எழுதுகோல் மறுக்கிறது. ஆனலும் படிப்பினைக்குரிய இந்த உருவத்தின ஒவ்வோர் அம்சங்கள் பற்றியும் எழுதவேண்டியுள்ளது. நாகரிகப் போர்வையில் நடமாடும் இந்த விஷஜந்து பற்றி முற்ருக அறிந்து கொள்வது அவசியந்தானே?

புகைப்பிடிப்பது நாகரிகம் எனக் கருதப்படுகிற காலம் இது. இவைகளின் விலையில் எவ்வளவு ஏற்றம் இருந்தாலும் புகைபிடிக்கும் நாகரிகமும் உயர்ந்து கொண்டுவருகிறது! புகை பிடித்தல் மாணவர்களிடையே சர்வசாதாரணமாகி விட்டது. கடன்பட்டும், களவெடுத்தும், கைநீட்டியும், பகிர்ந்தும் புகை பிடித்து மகிழ்வது இன்றைய உச்சப்போக்கு! இவைகள் பெண்ணினத்தையும் பற்றிக் கொண்டிருப்பதை அன்று பார்த்த போது உனது கடிதம் சொன்ன கதைகள் என் சிந்தனைத் திரையில் ஒரு கணம் வந்து மறைந்தது!

புகைபிடிப்பது செலவினம் என்பது அதிகம் முக்கியமல்ல. காசைககரியாக்கி மகிழ்வதானல் சிகரெட்டை தீப்பற்ற வைத்து எட்ட நின்று எரிவதைப் பார்த்துவேண்டுமானல் மகிழலாம்! நாகரிகப் போர்வையில் மேற்கொள்ளப்பட்ட இப் பழக்கத்துக்கு அதிகமானோர் பலியாகிவிடுகின்றனர். மனிதனை மனிதன் கட்டியாள நினைக்கும் நம்மிற் பலர், இப்படியான ஜடப்பொருள்களுக்கு தாமே கட்டுப்பட்டுக் கிடப்பது வேடிக்கை மாத்திரமல்ல; வேதனையாகவும் இருக்கிறது.

புகை பிடித்தல் மனித சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் என்பது அறிஞர் கருத்து. தாய்மைப் பண்புடைய பெண்ணினத்தை இந் நோய் அணுகுமானல் மனித சமுதாயமே அழிந்து போக வேண்டியது தான். புகைபிடிக்கும் பழக்கமுள்ள தாய்மார்கள் குழந்தை வளர்ப்புக்கு லாயக்கற்றவர்களாகிவிடுவர். வீரம் சேர்க்கும் தாய் முலைப்பால் நஞ்சு கலந்ததாக மாறிவிடுகிறது! இதனல் புதிய சமுதாயமே கொல்லப்படுகிறது. சமுதாயத்தின் ஆணிவேராக இருக்கும் பெண்ணினத்தை, இத்தகைய நோய்கள் அணுகாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். இந்தப் புகைபிடிக்கும் பழக்கம் மனித குலத்திலிருந்தே விடுதலைபெறுமாறு நாம் வழிகாட்ட வேண்டாமா?

வீதிக்கு வந்திருக்கும் அந்த உருவத்தின் மற்றைய அம்சங்களையும் இனிமேல் வரும் கடிதங்களில் எழுதுகிறேன்.

வணக்கம்.

உனது அன்புள்ள
கிருஷ்ண வேணி.

## மாங்கனி உணவுகள்

மாம்பழக் காலம் வந்தால் மாம்பழத்தை எப்படிச் சாப்பிட்டு முடிப்பது என்ற பிரச்சினை மாமரம் உள்ள பலருக்கு ஏற்படுவதுண்டு. பலர் தாம் அன்றன்று சாப்பிடக் கூடியதை வைத்துக்கொண்டு எஞ்சியதை உடனுக்குடன் விற்றுவிடுவார்கள். சிலர் இனபந்துக்களுக்கு அனுப்பி மாம்பழத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவார்கள்! சந்தைகளில் பெருந்தொகையாக வந்துகுவியும் மாம்பழங்களை வாங்கி வியாபாரிகள் பெட்டிகளில் அடைத்துப் பிறஊர்களுக்கு அனுப்பிவிடுவர். சில சமயங்களில் இங்கிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மாம்பழங்கள் பிறநாடுகளில் பல்வேறு உணவு வகைகளாகத் தயாரிக்கப்பட்டுப் போத்தல்களிலும் தகரங்களிலும் அடைக்கப்பட்டுத் திரும்பவும் இங்கு வந்து விற்பனையாகின்றன. நாம் அவற்றுக்கு அதிக பணம் கொடுத்து வாங்குவதுமுண்டு இவ்வாறு எமது நாட்டுக் கனியைப் பிறதேசத்துக்கு அனுப்பித் திரும்பவும் அதிக பணம் கொடுத்து வாங்குவதைவிட நாமே பலவித மாங்கனி உணவுகளைத் தயாரிக்கலாம் எனச் செல்வி ஆறுமுகம் கருதுகிருர். மாங்கனியைப் பாதுகாக்கும் வகையினையும் மாங்கனி உணவுகளைத் தயாரிக்கும் வகைகளையும் இங்கு சிறிது விவரமாகத் தருகிருர். மாங்கனி உணவுவகைகளை நாளாந்த உபயோகத்துக்கு நாமே தயாரிக்கலாம் எனவும் வியாபார முறையில் இதைக் கையாளுவது மிகச் சிறந்தது எனவும் அவர் யோசனை கூறுகிருர். மாங்கனியிலிருந்து ஆறுவகை உணவுகளைத் தயாரிக்கலாம் என அவர் கூறுகிருர். அவை மாம்பழ ரசம், மாம்பழ ஜாம், மாம்பழப் பதார்த்தம், மாம்பழ இனிப்பு, மாங்காய்ச் சட்னி, மாங்காய் ஊறுகாய் ஆகியன.

செல்வி ஆறுமுகம் கூறும் ஒருவகை மாங்கனி உணவின் சமையல்பாகத்தை இங்கு தருகிருேம்.

### மாம்பழ ரசம்

தேவையான பொருட்கள்-

1. மாம்பழம் 6.
2. வெள்ளைச்சீனி ஒன்றரை இருத்தல்
3. எலுமிச்சம்பழம் 1

( 5ம்பக்கம் பார்க்க)

# நாத்தாண்டியா பட்டினசபை கலைக்கப்பட்டது

கொழும்பு, புதன்

உள்நாட்டுமந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா, நாத்தாண்டியா பட்டினசபையைக் கலைத்துவிட்டார். பட்டின சபை, தன்கடமையை நிறைவேற்றத் தவறியதால் மந்திரி தனது நடவடிக்கைக்குக் காரணம் கூறியுள்ளார். பட்டின சபையின் நிர்வாகத்தைக் கவனிக்கும்பொருட்டு திரு. ஷேர்லி டி' அல்விஸ் 6 மாதத்திற்கு விசேஷகமிஷனராய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---

கண்டி, புதன்

செஞ்சிலுவைச் சங்கத்தின் கண்டிக்கிளை காரியதரிசி திரு. சி. ஜே. ரத்னயக்கா (62 வயது) கார் விபத்தொன்றில் சிக்கி மரணமானர்.

## ரயில்வே கடவைகளில் பாதுகாப்பு

கொழும்பு, செவ்வாய்

ரயில்வே கடவைகளில் விபத்துக்கள் ஏற்படாதவாறு தடை செய்வதற்காக பாதுகாப்பான ஒழுங்குகள் செய்வதற்காக அரசாங்கம் ரூ. 100,000 இவ்வருடம் செலவிட உத்தேசித்துள்ளது.

பிரதானமாக கரையோரப் பகுதிகளிலும் மலைநாட்டுப்பகுதிகளிலும் உள்ள யிரல்வே கடவைகளில் ரயில்வே கேட்டுகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## விவசாயிகள் குத்தகைபற்றி விளக்கம்

கொழும்பு, புதன்

நெற்காணிமசோதா சம்பந்தமாக விவசாயப்பகுதி விடுத்துள்ள அறிக்கை யொன்றில் களுத்துறை, மாத்தறை, காலி ஆயகி இடங்களில் விவசாயிகளின் குத்தகைபற்றிக் கூறப்பட்டுள்ளது. ஏக்கருக்கு 8 புசல் நெல் அல்லது மொத்த விளைச்சலில் கால் பங்கு இவற்றில் எது குறைவாயிருக்கிறதோ அதையே காணிச் சொந்தக்காரருக்குக் குத்தகையாகக் கொடுக்கவேண்டுமென அதில் கூறுப்பட்ள்ளது.

# தண்டனையைக் கேட்டதும் கண்ணீர் விட்டு அழுதார்

## மனைவியையும் மகளையும் கொலைசெய்த வழக்கில் தீர்ப்பு

பண்டாரவளை, புதன்

குற்றவாளியான ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதும், அந்தக் குற்றவாளி கூண்டுக்குள் இருந்துகொண்டு கண்ணீர் விட்ட சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

மஸ்கேலியா காட்மோர் தோட்டத்தில் 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ந் திகதி மருதாயி என்ற அவரது மனைவியையும், ஞானேஸ்வரி என்ற அவரது மகளையும் கொலை செய்ததாக மஸ்கேலியா காட்மோர் தோட்டத் தொழிலாளி ஆறுமுகம் என்பவர் மீது குற்றஞ் சாட்டி இவ்வழக்கு பதிவாகியிருந்தது.

எட்டு நாள் விசாரணைக்குப் பின்னர் ஜூரிகளின் ஏகமனதான முடிவின்படி ஆறுமுகம் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதியரசர் டாக்டர் எ. டபிள்யு தம்பையா கியு. ஸி. ஆறுமுகத்துக்குமரணதண்டனை விதித்தார். தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதை அறிந்த ஆறுமுகம், கைகளை உயர்த்தி, கதறி அழுது தனக்கு குழந்தைகள் இருக்கின்றனர் என்றும் அதற்காக உயிர்ப்பிச்சை அளிக்கும்படியும் கேட்டு கண்ணீர் விட்டார்.


## நான் விரும்புவது நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...





குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

**இலவச சாம்பிள்**

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ 189,
கொழும்பு.

# நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.


## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 11—1—62**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 டாக்டர் இரஞ்சிதம் — தொடர்நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாமாலை, 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 டி. எஸ். லட்சுமிகாந்தம் டி. எஸ். கிருஷ்ணவேணி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 டி. எஸ். லட்சுமிகாந்தம் டி. எஸ். கிருஷ்ணவேணி - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 ஆர். கோபிநாத் — பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி டி. கே ராதாகிருஷ்ணன் - பாட்டு. 8-40 திரைப்பட இசை, 9-15 ரேடியோ நாடக இசை, 9-30 சென்னை அஞ்சல்.

---

## ஒரு பாடசாலையில் இரு அதிபர்கள்

நாகொடை, புதன்

நாகொடை மகாவித்தியாலயத்திற்கு இரண்டு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் அக்டோபர் மாதம் திரு ஏ. எச். எஸ். ஜயரத்ன நாகொடை மகாவித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். இந்த வருடம் பாடசாலை ஆரம்பித்ததும், கல்வி இலாகாவினல் நியமனம் செய்யப்பட்ட திரு. சந்திரபாலா சமரபண்டு அதிபராக கடமையாற்ற மேற்படி பாடசாலைக்கு வந்த பொழுது அங்கு ஏற்கனவே ஒருவா அதிபராக நியமிக்கப்பட்டிருந்ததைக் கண்டு வியப்புற்ருர்.

இப்பொழுது இந்தப் பாடசாலையின் அதிபராக திரு. ஜயரத்ன கடமையாற்றுகின்ருர்.

# "வயிற்றில் கத்தியால் வெட்டியதைப்பார்த்தேன்"

## உரும்பராய் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

1961-ம் வருடம் நவம்பர் மாதம் 23-ந் திகதி உரும்பிராயில் கட்டையன் வைத்தி என்பவரைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாகக் கதிரவேலு கந்தசாமி என்பவர்மீது குற்றம் சாட்டி சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கே. செபமாலை தொடர்ந்த வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் எஸ். வேலும்மயிலும் சாட்சியமளித்தபின் சின்னவி நன்னித்தம்பி சாட்சியமளித்தார்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலை பத்தரை மணியளவில் ஒரு குழந்தையை ஆஸ்பத்திரியில் அனுமதிப்பதற்காக தானும் காலஞ்சென்றவரும் சைக்கிள்களில் சென்றதாகவும் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிச் செல்லுகையில் சுமார் 60 அடிதூரம் தான் முன்னே சென்றுகொண்டிருந்த சமயம் 'நில்லடா' என்ற சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்ததாகவும் அப்பொழுது காலஞ் சென்றவரின் வயிற்றில் எதிரி கத்தியால் வெட்டியதைக் கண்டதாகவும் கூறினார். இதைக் கண்டு பீதியடைந்ததால் காலஞ்சென்றவரின் வீட்டுக்குச் சென்று அறிவித்துவிட்டு அவரது மகனுடன் சம்பவம் நடந்த இடத்துக்கு வந்ததாகவும் சாட்சி தெரிவித்தார்.

பொலிசார் பிற்பகல் 3-30 மணிக்கு தமது வாக்குமூலத்தைப் பதிவு செய்ததாகவும் கூறினார்.

மேல் விசாரணை இம்மாதம் 30-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிராசிக்கியூஷன் தரப்பில் இன்ஸ்பெக்டர் செபமாலையுடன் திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. ஜே. டி. ஆசீர்வாதம் ஆஜரானார்.

எதிரி தரப்பில் திரு. சாம். ஏ. சபாபதி திரு வி. செல்வத்துரையுடன் ஆஜரானார்.

## நிர்வாகம் யார...

(–1ம்பக்கத் தொடர்ச்சி)

இச்சுற்றறிக்கை தெரிவித்துள்ளது. வேலைநிறுத்தம் செய்யாதவர்களுக்கு விசேஷ சலுகைகள் வழங்கப்படுமெனவும் இந்தச் சுற்றறிக்கை அறிவித்துள்ளது முற்றும் தவறான ஒரு சூழ்நிலையில் திறைசேரிக் காரியதரிசி நடவடிக்கை எடுத்துள்ளார். இவ்வித நடவடிக்கைகள் எடுக்க திறைசேரிக்கு ஒருவித அதிகாரமும் கிடையாது. பப்ளிக் சேர்விஸ்கமிஷன் மூலம்தான் எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியும்.

அரசாங்கம் சர்வாதிகார ஆட்சி செலுத்த எடுத்துக் கொண்ட முயற்சியின் முதல் கட்டம் இது.

## அமைச்சர் இலங்கரத்தின பாகிஸதான் செல்கிறார்

கொழும்பு, புதன்

உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின தலைமையில் வர்த்தக தூது கோஷ்டியொன்றும் அடுத்த வாரமுற்பகுதியில் பாகிஸ்தானுக்குச் செல்லவிருக்கிறது. பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலிருந்து வரும் வர்த்தகத் தொடர்பை மேலும் விஸ்தரிக்கும் நோக்கமாகவே இத் தூதுகோஷ்டி பாகிஸ்தானுக்குச் செல்கிறது.

## பரிசுப்போட்டிகள் இரகசியப் பொலிஸார் கண்காணிப்பு

கொழும்பு, புதன்

அழகுப் போட்டிகள் உட்பட சமீபகாலங்களில் நடத்தப்பட்டு வரும் பலபரிசுப்போட்டிகள், சில பரிசுப் போட்டி சட்ட விதிகளுக்கு முரணாக நடத்தப்பட்டு வருவதாக இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுசம்பந்தமாக இரகசிய பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

# ரூ.7000 பெறுமதியான கார் திருடியதாக வழக்கு

யாழ்ப்பாணம், வியாழன்

உரும்பிராயைச் சேர்ந்த எஸ். பொன்னுத்துரைக்குச் சொந்தமான ரூ. 7000 பெறுமதியான இ. என். 2161 நம்பர் காரைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டி நல்லதம்பி துரைராசா, சின்னத்துரை சாந்தலிங்கம், ஆறுமுகம் துரைசிங்கம், சின்னையா சிவராஜா, சின்னத்துரை தம்பிராசா, ராஜதுரை அப்புத்துரை ஆகியோர்மீது தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருடுவதற்காக சதித்திட்டம் வகுத்ததாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு ஸ்திரமானதல்ல என முதலாவது எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறிப்பிட்டார்.

அட்டர்னி ஜெனரலுடன் கலந்து ஆலோசனை செய்து திருத்தப்பட்ட குற்றச்சாட்டைத் தாக்கல் செய்யுமாறு வழக்கைத் தொடர்ந்திருந்த பொலிஸ இன்ஸபெக்டர் திரு. கே. செபமாலையிடம் மாஜிஸ்டிரேட் கூறினார்.

வழக்கு அடுத்த மாதம் 7-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. திரு வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் முதலாவது எதிரி சார்பில் ஆஜரானார்.

டி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் 2-ம், 3-ம் 4-ம், 5-ம், 6-ம் எதிரிகள் சார்பில் ஆஜரானார்.

## பின்னேர வகுப்புகள் மாற்றியமைக்க நடவடிக்கை

கொழும்பு, புதன்

இவ் வருடத்தில் பின்னேர வகுப்புகள் நடத்தப்படும் பாடசாலைகளில் அடுத்தவருடம் காலை வகுப்புகள் நடத்தவும் பின்னர் அதற்கடுத்த வருடத்தில் இந்நேரத்தை மாற்றி வகுப்புகளை நடத்த கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

பின்னேர பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தொடர்ந்து பின்னேர வேளைகளில் கல்வி பயிலாது காலை வேளைகளில் கல்விபயில வசதி செய்யுமுகமாகவே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பின்னேரப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் இருட்டிய பின்னரே வீடு வந்து சேருகின்றார்களென்றும் இப் பாடசாலைகளில் பயில்வது அவர்களுக்கு அதிக களைப்பைக் கொடுப்பதாக இருக்கிறது என்றும் பல மாணவர்களின் பெற்றோர்கள் கல்வி இலாகாவுக்கு முறையிட்டுள்ளார்கள் என கல்வி அமைச்சின் உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஈராக்கில் உருக்கு ஆலை

பாக்தாத், ஜன. 10

பாக்தாத்தில் உருக்கு ஆலை ஒன்றை நிறுவுவதற்காக சோவியத் ஸ்தாபனம் ஒன்றுடன் ஈராக் அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

# மீன்பிடி தொழிலுக்குப் புதிய கார்ப்பரேஷன்

## விரைவில் அமைக்க காணி அமைச்சு ஆலோசனை

கொழும்பு, புதன்

மீன்பிடிப் பகுதியின் விற்பனவுத் தொழில்களைக் கண்காணிப்பதற்கு ஒரு கார்ப்பரேஷனை நிறுவ வேண்டும் என்னும் யோசனையைக் காணிவ்வசாய அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வா பரிசீலனை செய்து வருகிறார்.

காணி விவசாய அமைச்சின் பார்லிமெண்டரி ஆலோசனைக் கமிட்டி, இப்பேற்பட்ட கார்ப்பரேஷன் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்துள்ளது. இலங்கை கூட்டுறவு மீன் விற்பனவுச் சங்கத்தைக் கொண்டு இந்தக் கார்ப்பரேஷனை ஆரம்பிக்க வேண்டும் எனவும் பார்லிமெண்டரி ஆலோசக கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

மீன்பிடி இலாகாவின் குளிர் சாதன வசதிகளும், பெரும் படகு மீன்பிடி வேலைகளும் கார்ப்பரேஷன் கண்காணிப்பில் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

மீன்பிடித் தொழில் சம்பந்தமான பல அலுவல்களையும் தனிப்பட்ட தாபனம் ஒன்று செய்து வரவேண்டும் என இக்கமிட்டி கருதுகிறது.

## தந்தை விற்ற குழந்தையை தாய் மீட்டாள்

கோயம்புத்தூர், ஜன. 10

தமது 7 மாதக் குழந்தையை ராமன் என்பவர் 10 ரூபாவுக்கு விற்றார். ஆனால் குழந்தையின் தாய் பொலிசாரின் உதவியோடு அக்குழந்தையை மீண்டும் பெற்றார்.

இந்த விசித்திர நிகழ்ச்சி கோயம்புத்தூருக்குச் சமீபத்தில் நிகழ்ந்தது.

பிள்ளையில்லாதவர் எனக் கூறப்படும் குணியமுதூர் கிராமத்திலுள்ள ஒருவருக்கு, கண்வர் பாளையத்தைச் சேர்ந்த ராமன் தமது குழந்தையை 10 ரூபாவுக்கு விற்றார். தனது கணவனையும் குழந்தையையும் காணாத ராமனின் மனைவி பொலிசாரிடம் புகார் செய்தார். பின்னர் பொலிசாரின் உதவியுடன் அவர் தமது பிள்ளையைத் தேடிக் கண்டு கொண்டார்.

# 'அரசியல் வேறுபாடின்றி பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும்'

—யாழ்ப்பாண எம். பி.

யாழ்ப்பாணம், வியாழன்

'யாழ்ப்பாண இளைஞர் உத்தியோக மோகத்தை விட்டு சிறு குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட்டு உழைக்க வேண்டும். இதன் மூலம் நமது சமூகத்தின் பொருளாதாரத்தை விருத்தி செய்ய வேண்டும். அரசியல் கருத்து வேறுபாடுகள் இது விஷயத்தில் தலைகாட்ட அனுமதிக்கக்கூடாது' என யாழ்ப்பாணம் கார்மேல் சாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பெண்கள் தையல் நிலையத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா கூறினார்.

இவ்வித தையல் நிலையம் இலாபகரமான ஒரு வேலையில் பெண்களை ஈடுபடச் செய்கிறது என்றும் நிலையத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டுமெனவும் திரு. அல்பிரட் துரையப்பா மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

முன்னை நாள் காரியதரிசி திரு. பரராசசிங்கம் தற்போதைய காரியதரிசி திரு. சா. வடிவேல் ஆகியோரும் பேசினர். குருநகர் மாதர்சங்கத் தலைவி திருமதி. மாகிரேட் பிரான்ஸிஸ் தலைமை தாங்கினர்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன்: சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாசமலர்

•

யாழ்ப்பாணம் மனோகரா சிவாஜி கணேசன், பத்மினி நடித்த பாக்கியவதி.

•

சாவகச்சேரி தேவேந்திரா: Frankenstein Daughter பிராங்கிஸ்ரீன் மகள் (ஆங்கிலம்)


நாளை முதல் குதூகல ஆரம்பம்!

கிங்ஸ்லி பிளாஸா நவா

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)

வெம்பிளி விஜயா

(கண்டி) (மட்டக்களப்பு)

மனோகரா

(யாழ்ப்பாணம்)

மற்றும் ஐந்து திரைகளில்



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி,
எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா,
எம. என். நம்பியார்
நடித்த

ராஜாமணி பிக்சர்ஸ்

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

கிங்ஸ்லி (கொழும்பு) மாலை 6, இரவு 9-30

(இன்று மட்டும்) சாந்தாராவ் நடித்த

ஜெயவீரன்

இன்று மகத்தான ஆரம்பம்!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன் நடித்த

பாச மலர்

மனோஹரா (யாழ்ப்பாணம) மாலை 6-30 இரவு 9-30

சிவாஜி கணேசன், பத்மினி நடித்த

பாக்கியவதி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.